கயப்பாக்கம் சதாசிவ செட்டியார்

ஓம்

திருச்சிற்றம்பலம்

செந்தமிழ்ச் செல்வி

திருநெல்வேலித் தென்னிந்திய

சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தினின்றுந்

திங்கள்தோறும் வெளிவருவது.

சிலம்பு ௭	மெய்கண்டான்யாண்டு-௭௱௭ ஐப்பசித்திங்கள் 1929௵ அக்டோபர்—நவம்பர்௴	பரல் ௰

திருச்சிற்றம்பலம்

கொல்லத் தானம னார்தமர் வந்தக்கால்
இல்லத் தார்செய்ய லாவதெ னேழைகாள்
நல்லத் தானமை யாளுடை யான்கழல்
சொல்லத் தான்வல்லி ரேற்றுயர் தீருமே.

அப்பர்.

உரை:

இல்லத்தார், வீட்டார்; என்றது மனைவி மக்களும் எனைச் சுற்றத் தாருமென்க. எழைகா ளெனப்பட்டது, அறிவின்கண், எழையவரை; ‘நல்லத்தான்,’ திருநல்லமென்னுந் திருப்பதியை யுடையானென்பது. துயர், கூற்றுவன்பாற் சிக்குந் துயர்.

பொக்கம் பேசிப் பொழுது கழியாதே
துக்கந் தீர்வகை சொல்லுவன் கேண்மினோ
தக்கன் வேள்வி தகர்த்த தழல்வண்ணன்
நக்கன் சேர்நல்ல நண்ணுத னன்மையே.

பொக்கம், பொய்; ஆவது நிலையாமை குறித்தது; இஃதீண்டு ஆகு பெயராய்ப் பொய்மையையுடைய உலக வாழ்க்கையை யுணர்த்தா நின்றதென்க. நக்கன், சிவபெருமான்; நகுதலையுடையவனென்பது பொருள்; எஞ்ஞான்றுந் துன்பமென்பதே இல்லாதவனுகலானும், எதொன்றையும் எளிதிலே முடிப்பவனுகலானும் இங்ஙனங் கூறப்பட்டான்; முப்புரங்களை அழிக்குங்கால் அவற்றை நகைத்தே அழித்தானென்பதுங் காண்க. அன்றி, 'எஞ்ஞான்றும் விளக்கமுடையவ' னெனினுமாம்.

பிணிகோள் வார்குழற் பேதையர் காதலால்
பணிகண் மேவிப் பயனில்லை பாவிகாள்
அணுக வேண்டி லரனெறி யாவது
நணுகு நாத னகர்திரு நல்லமே.

பிணித்தலைக் கொண்ட நீண்ட கூந்தலினையுடைய மாதரென்று கொள்க. பிணித்தல், பின்னல்; அன்றிக் காண்போ ருள்ளத்தைப் பிணித்த லெனினுமாம். பணிகள், பேதையர்தம் பணிகள்; 'நாதன் நணுகும் நக' ரென்பது; 'அரன் நெறியாவது நல்லம்' என்று முடிக்க.

தமக்கு நல்லது தம்முயிர் போயினுல்
இமைக்கும் போது மிராதிக் குரம்பைதான்
உமைக்கு நல்லவன் ஞனுறை யும்பதி
நமக்கு நல்லது நல்லம டைவதே.

உயிருக்கு என்றும் அழிவில்லை யென்பார், 'தமக்கு நல்லது தம்முயிர் போயினுல்' என்றூர். ஆனுல் உடம்பு அவ்வியல்பின தன்றென்பது இரண்டாம் அடியினுல் உணர்த்தப்பட்டது. 'உறையும்பதி நல்லம் அடைவது நமக்கு நல்லது' என்க.

உரைத ளர்ந்துட லார்நடுங் காமுனம்
நரைவி டையுடை யானிட நல்லமே
பரவு மின்பணி மின்பணி வாரோடே
விரவு மின்விர வாரைவி டேமினே.

உரைதளர்ந்து, நாக்குழறி; உடலார், சுற்றத்தார். உடம்பின் ரொடர்பால் ஏற்படுகின்றவரென்பது. பரவல், வழுத்தல்; பணிவாரோடே விரவுதல், நல்லாரிணக்கம்.

அல்ல லாகவைம் பூதங்க ளாட்டினும்
வல்ல வாறுசி வாய நமவென்று
நல்ல மேவிய நாத னடிதொழ
வெல்ல வந்த வினைப்பகை வீடுமே.

ஆக, உண்டாக; ஆட்டினும், அலைப்பினும்; வல்லவாறு, இயன்ற முறையில். 'வெல்ல வந்த' வென்பது ஆணவமலத்தின் பேராற்றலை யுணர்த்திற்று. வினைப்பகை, பண்புத்தொகை.

மாத ராரொடு மக்களுஞ் சுற்றமும்
பேத மாகிப் பிரிவதன் முன்னமே
நாதன் மேவிய நல்ல நகரதொழப்
போது மின்னெழு மின்புக லாகுமே.

பேதமாகி, உள்ளம் வெறுத்து; 'ஆகிப் பிரிவத' னென்பது, ஒன்றன் எச்சம் பிறிதொரு வினைமுதலின் வினையொடு முடிந்தது. 'நல்ல நகர் தொழ அந் நல்லமென்னு நகர் புகலிடமாகு' மென்பது கருத்து.

வெம்மை யான வினைக்கடல் நீங்கிநீர்
செம்மை யாய சிவகதி சேரலாம்
சும்மை யார்மலர் தூவித் தொழுமினோ
நம்மை யாளுடை யானிட நல்லமே.

துன்ப உணர்ச்சியைக் காட்டுதற்கு, 'வெம்மையான' வென்று விதந்தார். வீடுபேற்றின்கண் ஏதோ ரூனமும் இன்மையாற் 'செம்மை யாய சிவகதி'யென் றருளிச்செய்யப்பட்டது. வீட்டு நிலையை உரைக்க நேரும் இடங்களில், எல்லா வாசிரியன்மாருஞ் 'செம்மை' யென்னும் இச் சொற்பெய்துரைத்தலில் ஒரே ஒருமையுடையராய்க் காணப்படுகின்றார். "செம்மையே யாய சிவபதம்" என்னும் மணிவாசகப்பெருமான் றிருவாசகமும், "சிறப்பென்னுஞ் செம்பொருள் காண்ப தறிவு" என்னுந் திருவள்ளுவனர் திருக்குறண் மொழியும், "சேவடி படருஞ் செம்மல் உள்ளம்" என்னும் நக்கீரதேவர் முருகாற்றுப்படை கூற்றும், "செம்மலர் நோன்றாள்" என்னும் மெய்கண்டதேவர் சிவஞானபோத வுரையும் முதலாயினவற்றை உற்றுக் காண்க. சும்மை, ஒலி; ஈண்டு வண்டொலி யென்க. 'நல்லம் தொழுமின்; சிவகதி சேரலா'மென்பது.

காலமான கழிவதன் முன்னமே
ஏலு மாறு பணங்கிநின் றேத்துமின்
மாலு மாமல ராஞெடு மாமறை
நாலும் வல்லவர் கோனிட நல்லமே.

காலம், வாழ்நாள்; காலமான, பலவின் படர்க்கை வினையாலணையும் பெயர். 'பல கால' மென்பதுபோற் பன்மையில் வந்ததென்க. 'வல்லவாறு' என்று மேலருளிச் செய்தாற்போல, ஈண்டும் 'ஏலுமாறு' என்றார். ஒடு, எண்; வல்லவர்கோன், இடையே பண்பொட்டு விரித்துரைக்க.

இளவழகனார்.

மகா பாரதம்

[திரு. தி. த. கனகசுந்தரம் பிள்ளையவர்கள் B.A.]

இந்தியா தேசத்தில் பழைய இதிகாசங்களாயுள்ளன மகாபாரதமும் இராமாயணமுமாம். இதிகாசமென்பது பழையதாகிய கதையைக் கூறுவது. அது தொல்காப்பியத்திற் கூறப்படும் தொன்மை என்பதனோடொக்கும். பழங்கதைமேற் செல்லும் இவ்விதிகாசம் இருவகைப்படும். ஒன்று தான் தோன்றிய காலந்தொட்டு எழுதப்படாமல் கர்ணபரம்பரையாய் வழங்கி வந்தது: மற்றொன்று முதலில் எழுதாக் கேள்வியாய்ப் பயின்று வந்து பிற்காலத்துப் புலவர்களால் இடையில் கூட்டியும் குறைத்தும் புதுக்கியும் திருத்தி யாக்கப்பட்டது. எப்போதும் எழுதாக் கேள்வியாயே வழங்கி வந்த இதிகாசங்கள் உலகத்தில் மிகச்சில. அவை பிற தேசங்களில் ஒன்றிரண்டு உளவேனும் இந்தியாவில் ஒன்றுதானும் உளதாய்க் காணப்படவில்லை. ஆகவே மகாபாரதம் மேற்கூறிய இரண்டாம் வகுப்பைச்சார்ந்த இதிகாசமாதல் வேண்டும். அது யாங்ஙன மென்பது முன்னர்க் கூறுமாற்றால் தெள்ளிதின் உணரப்படும்.

மகாபாரதத்திற் கூறப்படும் பெரிய யுத்தம் இற்றைக்கு மூவாயிரம் வருடங்களுக்கு முன் நடந்ததாக எண்ணப்படுகின்றது. இவ் யுத்தம் நிகழ்ந்த சில வருடங்களில் அதனைப்பற்றியும் அதில் விளக்கமடைந்து புகழ்படைத்த வீரர்களைப்பற்றியும் பாட்டுக்கள் இயற்றப்பட்டுச் சூதர் மாகதர் முதலிய புகழ்வோரால் ராஜசபைகளிலும் மற்றுமிடங்களிலும் எடுத்துக் கூறப்பட்டுக் கர்ணபரம்பரையாய் உலகத்தில் பயின்று வந்தன. அவைகளை யெல்லாம் ஒருங்கு சேர்த்துப் பிற்காலத்தில் கிருஷ்ண துவைபாயனர் என்னும் புலவர் ஒரு பேரிதிகாசமாக யாத்தனர். அவர் காலத்திலேயே பாரத யுத்தத்தைப் பற்றிய உண்மைச் சரிதங்களெல்லாம் மறைந்துபோய், உண்மை வீரர்களல்லாதோரே யுத்தத்தில் விளக்கமுற்றவர்களாய்த் தோன்ற, தீயோர் அழிய நல்லோர் சிறப்படைதலாகிய அறநூற் கொள்கையை எடுத்துரைக்கும் செய்யுளாய் விட்டது மகாபாரதம். காளிதாசன் இரகுவமிசத்தை இயற்றினது போலாக, வான்மீகி இராமாயணத்தை இயற்றினது போலாக, கிருஷ்ண துவைபாயனர் மகாபாரதத்தை இயற்றினவரல்லர்; பாரத யுத்தத்தின்மேற் சென்ற பழைய சிற்றிதிகாசங்களை யெல்லாம் ஒருங்கு திரட்டி ஒரு பேரிதிகாசமாக யாத்தனர் என்க. வியாசரென்னும் அவருடைய காரணப்பெயரும் இதனையே தெரிவிக்கும்; அப்பதத்திற்குத் தொகுத்தோர் என்பது பொருளாகலின்.

இவ்விதமாகக் கிருஷ்ண துவைபாயனர் மகாபாரதத்தை யாத்தது இன்ன காலத்தில் என்று ஒருதலையாகக் கூறுதலியலாது; இற்றைக்கு இரண்டாயிரத்தைந்நூறு வருடங்களுக்கு முன்னரே யாத்தனரென்றே சொல்லலாம். கிறிஸ்து பிறக்க ஐந்நூறு வருடங்களுக்கு முன் புத்த மத முண்டாயிற்று. அப்படிப் புத்த மதந் தோன்றியகாலத்து வழங்கி வந்த ஆஸ்வலாயன சூத்திரத்தில் பாரதம் அல்லது மகாபாரதம் என்று ஒருநூல் கூறப்பட்டுளது. ஆகவே அக் காலத்திற்கு முன்னரேயே பாரதக் கதைமேற் சென்ற சிறு செய்யுட்களெல்லாம் ஒருங்கு

சேர்க்கப்பட்டு ஒரு நூலாக யாக்கப்பட்டு விட்டன வென்பது தெளியப்படும்.

இவ்வாறு இரண்டாயிரத் தைந்நூறு வருடங்களுக்கு முன் கிருஷ்ண துவைபாயனரால் யாக்கப்பட்டபடியே மகாபாரதம் இப்போது இருக்கவில்லை. காலஞ் செல்லச் செல்ல அது வளர்ந்துகொண்டே வந்துவிட்டது. மகாபாரதத்தில் இப்போது தொண்ணூறுயிரம் சுலோகங்களுக்கு மேல் உள்ளன. அதற்கு ஓரனுபந்தமாய் வழங்கும் அரிவமிசத்தையும் சேர்த்தால் சுலோகத்தின் தொகை லக்ஷத்திற்கு மேற்படும். இவற்றுள் இருபதினுயிரஞ் சுலோகமே பாரதக்கதையைக் கூறுகின்றன. ஆதலால் கிருஷ்ண துவைபாயனரால் யாக்கப்பட்டபோது மகா பாரதத்தின் சுலோகத்தொகை இருபதினுயிரமளவென்றே கொள்ளவமையும். மகாபாரதத்தின் முகவுரையாகிய அநுக்கிரமணிகையில் உபாக்கியானங்கள் சேர்க்கப்படுமுன்னர் வியாசர்மகா பாரதத்தை இருபத்து நாலாயிரஞ் சுலோகங்களால் இயற்றினு ரென்றும் புலவோர்கள் அதனையே பாரத மென்று கொள்வார் களென்றும் கூறப்பட்டுளது. இக் கூற்று மேல் எடுத்துரைத்த கொள்கையை நன்கு வலியுறுத்துகின்றது. மகாபாரதம் கிருஷ்ண துவைபாயனரால் யாக்கப்பட்டபின் பரத கண்டத்திற் றோன் றிய புலவர்க ளொவ்வொருவரும் அதனைச் சிறிது சிறிதாக வளர்த்துக்கொண்டே வந்தார்கள் ; வடதேசத்திலுள்ள ஒவ் வொரு சாதியாரும் தங்கள் தங்கள் சரித்திரங்களும் அதனுட் கூறப்பட வேண்டுமென்று விரும்பினுர்கள்; புது மதங்களை ஸ்தாபிக்க வந்த ஆசாரியர்கள் ஒவ்வொருவரும் தங்கள் தங்கள் கொள் கைகளெல்லாம் அதனுள் எடுத்தாளப்பட வேண்டுமென்று கருதினுர்கள். கற்றறிவில்லாத சனங்களுக்கு அறிவு புகட்டவேண்டு மென்ற நோக்கத்தோடு அறநூற் பனுவல்களும் நீதிநூற் பனுவல் களும் அதனோடு சேர்க்கப்பட்டன ; சாதி தர்மங்களும் ஆசிரம தருமங்களும் அக் கருத்துடனேயே அதனோடு புணர்க்கப்பட்டன. இவ்விதமாகவே ஆதிகாலத்தில், இப் பரதகண்டத்தில் வழங்கிவந்தனவான தேவர்களையும் முனிவர்களையும், அரசர்களை

யும் பற்றிய பலவித கதைகளும் அதனோடு கோக்கப்பட்டன. புத்தமதம் வீழ்ந்து கிருஷ்ணனைத் தெய்வமாகக் கொண்டாடுதலே பரத கண்டத்தில் பரவியபோது மகாபாரதமும் காலத்துக் கிணங்கக் கோலங் கொண்டு கிருஷ்ணனுக்குப் பரத்துவம் கூறும் நூலாய் மாறிற்று. இவ்வாறாகவே மகாபாரதம் காலம் வளர வளர்ந்து வந்தது, தனது இதிகாசத்தன்மை கெட்டு, இப்போது சமய கொள்கைகளுக்கும் தர்மோபதேசங்களுக்கும் வெறுங்கட்டுக்கதைகட்கும் ஓரிருப்பிடமாய் இருக்கின்றது.

மகாபாரதம் இவ்வாறு அதிகமாக வளர்ந்ததன்பின் அதனை மேலும் வளரவொட்டாமல் தடுத்தற்காக இற்றைக்கு ஆயிரத்தைந்நூறு வருடங்களுக்கு முன் ஒருபாயம் செய்யப்பட்டது. பர்வ சங்கிரகமென முகவுரையொன்றியற்றி அதனுள் மகாபாரதத்துட் கூறப்படும் விஷயங்களொவ்வொன்றையும் எடுத்துக் காட்டிப் பர்வங்கள் ஒவ்வொன்றிலுமுள்ள சுலோகங்கள் இத்தனையென்று கணக்கேற்படுத்தப்பட்டது. இந்தக் கணக்கின்படி மகாபாரதத்துச் சுலோகத்தொகை எண்பத்து நான்காயிரத்து எண்ணூற்றுத் தொண்ணூற்றைந்து. இப்படிக் கணக்கேற்பட்டதன் பின்னும் மகாபாரதம் வளராமல் இருந்ததோவென்றால் இல்லை. காலாந்தரத்தில் புதுவிஷயங்களும் புதுச்சுலோகங்களும் இடையிடையே சேர்க்கப்பட்டு இப்போது அது தொண்ணூறாயிரம் சுலோகங்களுள்ளதாயிருக்கின்றது. இது மேற்கூறியபடி அரிவமிசம் என்னும் அநுபந்தத்தை நீக்கிக் கண்ட கணக்கென்றறிக.

இவ்விதமாகப் பழைய நூல்களின் இடையிடையே புது விஷயங்களையும் புதுப்பாட்டுக்களையும் சேர்ப்பது சமஸ்கிருதத்தில் மாத்திரம் நிகழ்ந்ததன்று. அது தமிழ் நூல்களிலும் ஏறக்குறைய ஒவ்வொன்றிலும் காணப்படுகின்றது. சீவகசிந்தாமணியைத் திருத்தக்கதேவரியற்றியது இரண்டாயிரத்தெழுநூறு செய்யுட்களாலென்பது அதன் இறுதியிலுள்ள 'முந்நீர் வலம்புரி' என்றற்றொடக்கத்து ஓம்படைச் செய்யுளால் தெரிய வருகின்றது. அதற்கு உரை யெழுதிய நச்சினார்க்கினியார்

கருத்து மிதுவே. இப்போது சீவக சிந்தாமணியில் மூவாயிரத்து நூற்றுநாற்பத்தைந்து செய்யுட்களுள்ளன. ஆகவே மேற்கூறிய இரண்டாயிரத் தெழுநூறு மொழிய எஞ்சிய நானூற்றுநாற்பத்தைந்து செய்யுட்களும் வேறு புலவர்களாற் பாடி இடையிடையே சேர்க்கப்பட்டன வென்பது கூறுமே யமையும். இவைகளெல்லாவற்றையும் கந்தியார் என்பார் செய்து சேர்த்தார் என்பது சிலர் கொள்கை. தென்தேசத்தில் தமிழ்ச் சைவர்களால் மிகவுங் கொண்டாடப்படுவதாகிய பெரியபுராணத்தைச் சேக்கிழார் நாலாயிரத்து இருநூற்றைம்பத்து மூன்று விருத்தத்தாற் பாடினரென்று கொற்றங்குடி உமாபதிசிவாசாரியரால் தாமியற்றிய திருத்தொண்டர் புராணசாரத்தின் ஈற்றில் கூறப்பட்டுள்ளது. இப்போது பெரியபுராணத்தில் நாலாயிரத்திருநூற்றுத் தொண்ணூற்றொன்பது விருத்தங்களுக்குமேற் காணப்படுகின்றன. ஆகவே உமாபதிசிவாசாரியர் கூறிய கணக்கிற்கு மேலதிகமாயுள்ள நாற்பத்தாறு விருத்தங்களும் இடையிடையே வேறு புலவர்களாற் பாடிச் சேர்க்கப்பட்டிருத்தல் வேண்டும். இவைகளை வெள்ளிபாட்டென்றும் துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகளுக் காசிரியராகிய வெள்ளியம்பலத் தம்பிரான் பாடிச் சேர்த்தாரென்றும் கூறுப. இவ்வெள்ளிபாட்டுக்கள் கம்பராமாயணத்தும் மூவர்களியற்றிய தேவாரத்திடத்தும் வேறு நூல்களிலும் காணப்படுகின்றன. இவ் வெள்ளியம்பலத் தம்பிரான் போன்ற நாணிலிகளாகிய புலவர்களால் நம் சம்ஸ்கிருத தமிழ் நூல்கள் தம் சிறப்பும் மதிப்பும் கெட்டுக் கிடக்கின்றவற்றிற்களவில்லை.

மகாபாரதத்தின் பாகங்கள் ஒவ்வொன்றும் மேலே விளக்கியபடி வெவ்வேறு காலத்தில் இயற்றிச் சேர்க்கப்பட்டவைகளாயிருத்தலின் அதனுட் கூறப்படும் ஒழுக்கங்களும் வழக்காறுகளும் இப்பரதகண்டத்தில் ஒரேகாலத்தில் நிகழ்ந்து வந்தனவென்று கொள்ளுமுடியாது; அதுவுமன்றி இன்ன பாகத்தில் கூறப்படும் ஒழுக்கங்கள் இன்ன காலத்தினவென்று கூறுதலும் இயலாது. இதனை ஆய்ந்தறிய வல்லரல்லாதார் மகாபாரதத்துட்

கூறப்படும் ஒழுக்க வழக்கங்கள் யாவற்றையும் ஒரேகாலத்தன வெனக் கொண்டு பேரிடப்படுவரென்க. உதாரணமாக மகாபாரதத்தில் கிருஷ்ணனுக்குப் பரத்துவங் கூறப்படுவதனால் அது பாரதயுத்தம் நடந்த காலத்திலாக, மகாபாரதந் தோன்றிய காலத்திலாக, பரதகண்டத்தில் நிகழ்ந்து விளங்கிற்றென்று கொள்ளற்க; மகாபாரதம் கடைசியாய்த் தொகுக்கப்பட்டபோது நிலவியதொன்றென்றே கொள்க. கிருஷ்ணனுக்குப் பரத்துவங் கற்பிக்கப்பட்டது புத்தமதம் பரதகண்டத்தில் நின்று நீங்கியபோதென்றே கொள்ளப்படுகின்றது. அது கிறிஸ்து பிறந்த நான்காம் நூற்றாண்டிலென்று சொல்லுப. இதுபோல்வன இன்னும் பல உள. இவைகள் யாவும் வினு நிகழ விடமில்லாதவாறு ருசுப்பிக்கப்படவில்லை. அதனால் மகாபாரதம் கடைசியாய்த் தொகுக்கப்பட்ட காலம் நான்காம் நூற்றாண்டென்றே ஒருதலையாகக் கொள்ளற்கிடமில்லை. இவ்வாறே மற்றக் கிரந்தங்களின் காலமும் இன்னும் ஒன்றேனும் செவ்வனே வரையறுக்கப்படாமல் இருக்கின்றது. இதற்குக் காரணம் அக் கிரந்தங்களில் அவை தோற்றிய காலம் சொல்லப்படாமையும் அவை காலந்தோறும் மாறுபாடடைந்தமையுமாம்.

உபாக்கியானங்கள் யாவற்றையும் நீக்கிவிட்டால் மகாபாரதம் தமிழினுள்ள வில்லிபுத்தூர் பாரதத்தைப்பெரிதுமொக்கும். ஆகவே வில்லிபுத்தூரர் பாரதத்தைப் படிப்பதனால் ஒருவர் ஆதியில் கிருஷ்ண துவைபாயனரால் யாக்கப்பட்டபோது மகாபாரதம் இவ்வாறிருந்த தென்பதை ஒருவாறு அறிந்து கொள்ளலாம். வில்லிபுத்தூரர் பாரதம் தமிழ்நாட்டில் மிகவும் பயில வழங்குவதற்கும் நல்லாப்பிள்ளை பாரதம் பயில வழங்காமைக்கும் காரணம் முன்னது உபக்கியானங்களால் கதைத் தொடர்ச்சி இடையீடு படாது யாற்றொழுக்குப்போல் சென்றினிது முடிதலும் மற்றது, உபாக்கியானங்கள் மிக்குக் கதைத் தொடர்ச்சி யாண்டும் இடையீடுபட்டுக் கிடத்தலுமே போலும். உபாக்கியானங்கள் யாவற்றையும் கதைக்கு வேண்டாதன வென்று கொண்டு வில்லிபுத்தூரர் நீக்கிவிட்டது அவைகள் பிற்

காலத்தன வென்பதே அவரது கொள்கை யென்பதைக் காட்டாது போகினும் அவரோர் மெய்ப்புலவரென்பதை நன்கு விளக்குகின்றது.

பரத கண்டத்திலும் மற்றத் தேயங்களிலும் ஆதியில் தோன்றிய வேதம் முதலிய பழைய நூல்கள் யாவும் எழுதாக் கேள்வியாயே நெடுங்காலம் பயின்று வந்தன. இதற்குக் காரணம், எழுத்து அக்காலத்தில் தோன்றாமையேயாம். பரதகண்டத்தில் எழுத்துத் தோன்றியது கிறிஸ்து பிறக்க ஐந்நூறு வருடங்களுக்குமுன் என்பது பல பிரபல நியாயங்களால் நாட்டப்பட்டுள்ளது. ஆகவே ஆதியில் எழுதாக் கேள்வியாயிருந்த மகாபாரதம் தோன்றியது கிறிஸ்து பிறக்க பலநூறு வருடங்களுக்கு முன் என்பது போதரும். கிருஷ்ண துவைபாயனர் பழைய சிற்றிதிகாசங்களை ஒருங்கு சேர்த்து மகாபாரதத்தை யாத்த காலத்தில் கூட எழுத்துத் தோன்றவில்லை என்பதே பலருடைய கொள்கை. எழுத்தில்லாதபோது ஒருநூல் எழுதப்படுவதுமில்லை. மகாபாரதத்தை வியாசர் சொல்லக் கணேசர் எழுதினார் என்று அதன் முகவுரையிற் கூறியிருக்கின்றதே எனின், அது பிற்காலத்தாரால் இடையில் சேர்க்கப்பட்டதொன்றெனக. பல பிரதிகளில், முக்கியமாய்த் தென்தேசத்துப் பிரதிகளில், அது காணப்படாதிருத்தலினாலே அஃது இடையிற் றோன்றிய தொன்றென்பது நன்கு விளங்கும். அது நூல்களைப் பட்டையிலும் ஓலையிலும் எழுதுதல் பெருவழக்காய் வந்ததன் பின் தோன்றியிருத்தல் வேண்டும்.

பாரத யுத்தத்தை நடத்திய பாண்டவர் கௌரவர் என்னும் இருதிறத்தாருள் கௌரவர்களே ஒழுக்கமுள்ளவர்களென்றும் நியாயமும் அவர்கள் பக்கமே என்றும் அவர்களைத் தங்கள் வஞ்சகத்தினால் பாண்டவர்கள் வென்றார்களென்றும் இவ்வாறாகிய உண்மைச்சரிதம் பின்பு புலவர்களால் திரிக்கப்பட்டதென்றும் சிலர் கொள்வார்கள். இவர்கள் கொள்கை விரிக்கிற் பல்கும்

ஞானபோதினி.

கருமை

[திருக் கபசம் எழுதியது]

(௨௱௮-ம் பக்கத் தொடர்ச்சி)

அவுணர், அமரர் எனும் இருதிறத்தார்க்குக் கருமையும் செம்மையும் நிறமாக வாய்ந்ததே னென்பதையும்; இந்நிற வேறுபாடு இருளுக்கும் ஒளிக்குமுள்ள முரண்பாட்டை யுணர்த்து முறையையும்; இருளும் ஒளியும் முறையே அறிவின் மையையும் அறிவுடைமையையுங் காட்டும் பான்மையையும்; இவ்விரண்டிற்குமுள்ள பகைமை அவுணர்க்கு மமரர்க்கும் நடந்த போராகத் தொன்னூல்களில் வரையப்பெற் றிருப்பதை யும் முன் பார்த்தோம்.

அரக்கரைப் பற்றிப் புராணங்களிலும் வேறு நூல்களிலு மிருந்து நமக்குக் கிடைக்கும் வரலாற்றைக் கொண்டு பார்க்கு மிடத்து, அவர்கள் கருத்துப் பருத்து வளர்ந்தவராகவும், உடல்வலி இறப்பப் பெற்றவராகவும், உலக வின்பங்களை நனி விழையுமுளமுடையராகவும், அளவு கடந்த செல்வம் படைத் தவராகவுந் தோன்றுகின்றனர். சிற்சில நூல்களில் சிற்சில விடங்களில் மக்களூன் தின்னா மிலேச்சராக வரக்கரைக் காண் கின்றோம். ஆனால், பெரும்பான்மையோர் உயர்நிலை யெய்தி யுலகாண்ட வேந்தராகவே தோன்றுகின்றனர். வானமளாவிய மாட மாளிகையில் வாழ்ந்து, யானை, குதிரை, தேர்ப்படைக ளுடையவராய், எவருங் கண்டு வியக்கத் தக்கவாறு சிறப்புட னிருந்த விவரை மிலேச்சரென்ப தொவ்வாது. இராவணன், மாவலி முதலிய அவுணர் தலைவர்கள், குடிகளை யொடுக்கிக் கொடுங்கோல் செலுத்தினரென்று சொல்லொணாது. இரணி யன், சூரபதுமன் முதலியோரைக் கல்வியறியாக் கசடரென் றொதுக்குதல் கூடாது. இந்நாளில் மலைக்குகைகளில் வாழ்ந்து வரும் ‘இருளர்’ என்றவரைப்போன்ற ஒரு வகுப்பார்தான் அவுணர் என்று சொல்லுதலுமாகாது. அவர்கள் மக்கட்

பகுப்பைப் சேர்ந்தவரே யல்லரென்பது நம்பற்பாலதன்று. அரக்கரது செயலுஞ் சொல்லு மெண்ணங்களு மவர்களு மக்களே என்பதைத் தெளியக் காட்டுகின்றன. இங்ஙனமாயின், அரக்கரை மக்களினின்று வேறுபட்ட ஒரு வகுப்பாகப் பல் வேறு நாட்டு நூல்களிலுங் கூறியிருப்பது யாதுபற்றி?

இக்கேள்விக்கு விடை யளிக்க மற்றொரு கடாவெழுப்புதும். சிற்றன்னையின் கொடுமையால் நாடிழந்து தென்னாடு போந்த இராமனுக் குதவிசெய்து உறுதுணையாய் நின்றவர், மக்களா, குரங்குகளா? இவர்கள் குரங்குகளே என்று ஒரு தலையாகக் கூற முன் வருவோர்க்கு, யாம் பயன்படப் பகரக் கூடிய தொன்றுமில்லை. சில் லாண்டுகளுக்கு முன் ஐரோப்பாவில் நிகழ்ந்த பெருஞ் சண்டை மும்முரமாக நடந்து வருங்கால், ஜெர்மெனி நாட்டு மக்களை மிலேச்சர் என்று பொருள்படக் கூடிய 'ஹன்ஸ்' (Huns) என்று ஆங்கிலர் எழுதியுஞ் சொல்லியும் வந்தது பலருடைய நினைவி லின்று மிருக்கலாம், 'ஹன்ஸ்' என்ற சொல் வடமொழியில் (हूण) 'ஹூணு' என்று இன்னும் வழங்குகின்றது. 'ஹூணு' வென்பது நாகரீக மில்லாதவரைக் குறிக்கும். இந்த ஹூணர்கள் ஒரு காலத்தில் ஐரோப்பாவின் மீது படையெடுத்துச் சென்று, மிக மேன்மையுட னரசுபுரிந்த ரோமரை (The Romans) வென்று, நாகரீக ஒழுக்கத்திற்கு முரண்பட்ட கொள்கை யுடையவராயிருந்தனர். இவர்கள் இந்தியாவிற்கும் வந்து நாட்டின் பல பகுதிகளையுங் கைப் பற்றி யாண்டனர். மிலேச்சர்களாய் வந்தவர்கள் இந்நாட்டிலேயே குடி புகுந்து, இங்கிருந்த மற்ற மக்கட் பகுப்பினருடன் கலந்து, நாளாவட்டத்தில், பிராமணராகவும், ரஜபுத்ரராகவு மாறினரென்று சமஸ்கிருதத் தொன்னு லாராய்ச்சியிற் சால வல்லுநராய் விளங்கிய பந்தர்கார் (Bhandarkar) என்பவர், The Indian Antiquary என்னும் அரிய வெளியீட்டில் தக்க சான்றுகள் காட்டி வரைந்துளார். இது நிற்க, ஜெர்மனியரை மிலேச்சர்களென்று ஆங்கிலர் சொன்னதேன்? கல்வியிலவர்கள் குறைந்தவர்க ளென்றுவது, நடையுடை யொழுக்கங்களிற் பிறரைவிடத் தாழ்ந்தவர்களென்றுவது எவர் துணிந்து

சொல்லக்கூடும்? பல்வகை அறிவுத்துறைகளில் மற்ற மேனாட்டு மக்களைவிட ஜெர்மனியர் எவ்வளவு முன்னேறியவர்! ஆயினும் பகைமையாற் சண்டை விளைந்தபின், ஜெர்மனியரின் மேன்மையுங் கல்வியு மறைந்துபோய், அவர்களியற்றிய சிலவடாத செயல்களே மிகுதியும் ஆங்கிலருளத்திற் பதிந்ததால், அவர்களை ஹூணரென்று இழித்துரைப்பது எளிதாயிற்று. இவ்வாறு அறிவு மாற்றலு மிகுந்த ஒரு வகுப்பார் தமது எதிரிகளுக்கு அரக்கராயினர். ஆதலின், முற்காலத்தில் நூல்களெழுதினோர் யாதானு மொருவகையிற் றமக்கு முரண்பட்ட வலிமிகுந்த மக்களை யரக்கரென்று கூறிப் போந்தாரென்று கொள்ளுதும்.

ஆரியர் தம் வேள்வி முறைக்கு மாறுபட்ட மக்களனைவரையு மரக்கரென்றெழுதி வைத்தனர். இதை இவண் தொடர்வது 'கருமை' என்ற பொருளுக் கிடையூறாகும். ஆதலின், விடுத்து மேற்செல்லுதும். சில்லாண்டுகளுக்கு முன், தென்னாடு வந்த தவப்பெரும் புலவராகிய இரவீந்திரநாத தாகூர் (Rabindranath Tagore) சென்னையில் கோக்கலே மண்டபத்தில் (Gokhale Hall) நிகழ்த்திய சொற்பொழி வொன்றில், ஆரியர்தந் தெய்வம் விஷ்ணுவென்றும், திராவிடர்தந்தெய்வம் சிவனென்றுங் கூறினர். இக் கருத்துடைய தமிழர் பலருமுளர். விஷ்ணுவுஞ் சிவனு முறையே கரியருஞ் சிவப்பருமாதலால், அரக்கருக்கு மமரருக்குமுள்ள பகை யிவர்கட்குமுண்டோவென் றையப்பட விடமுண்டாகிறது. அரக்கருக்குந் திருமாலுக்கு மொழியாப் பகை யுண்டென்பது யாவருமறிந்த உண்மையாயிற்றே; இங்ஙனமாகவுங் கருமையிலிவர்களொருமைப்பட்டதெவன்? திருமாலின் கருமைப்பற்றி இடம் வாய்ப்புழிச் சொல்லுதும்.

நமதறிவிற்குப் புலப்படாத வகையிலொருபொருள் காணாமற் போகுமாயின், "இதுவென்ன மாயமா யிருக்கிறதே" என்ற பேச்செழுவதைத் தமிழர் யாவருமறிவர். ஆதலின், 'மாயம்' என்பது அறிவுக்கெட்டா வகையிற் செய்திகள்

நிகழ்தலாகும். இது முன்னு மெடுத்துரைக்கப்பட்டது. கடலி லொளிந்து போர்செய்த சூரபதுமனது செயலேயும், விண்ணில் மறைந்து வாளிதொடுத்த மேகநாதன் திறமையையு மாயத்திற் கெடுத்துக் காட்டாகக் கூறினேம். இராமாயண முழுமையு மிம்மாயமே நிறைந்துளது. மாரீசன் பொன் மானுக வந்த தும் சாவதற்கு முன் இராமனது குரலில் லக்ஷ்மணனை யழைத் தும்; இராவணன் நல்ல அழகிய துறவியாகச் சீதை முன் தோன்றியதும்; இலங்கையில் மாயா சீதையைக் கொண்டு வந்து இராமன் முன் கொன்றதும்; இந்திரஜித் அநுமனை மயங்கச் செய்து நாகபாசத்தாற் பிணித்ததும்; சூர்ப்பனகை எழில் நிறைந்த விளமங்கையாக வந்து நடித்ததும்; இன்னும் பல செய்திகளும் இராமாயணங் கற்றவர் நன்கறிந்தவைக ளாகும். இராமாயணத்தில் அரக்கரது மாயம் இத்தன்மைத் தாக, தாரகன் சூரபதுமன் முதலியோர் மாயை என்ற பெண் ணுக்குக் காசிபனுல் பிறந்தவர்களென்று தெரிய வருகிறது. சம்பராசுரன் மனைவிக்கு மாயாவதி என்று பெயர். மயனது மகளாகிய மண்டோதரியின் தமையனுக்கு மாயாவி என்று பெயர். கஜமுகாசுரனுண்டு வந்த நகர் மாயாபுரி என்பர். இங்ங னம், அவுணர்க்கு மாயத்திற்கும் நெருங்கிய கேண்மையுண் டென்று காண்கின்றேம். இருபதாம் நூற்றுண்டில் நச்சுக் காற்றை எதிரிகள்மீது செலுத்தியும், புகைத்திரள்களை எழுப்பி அவற்றின் பின் மறைந்து முன்னேறிப் பகைவர்களைத் திடீ ரென்று தாக்கியும், அறுபது மைல்களுக் கப்பாலுள்ள விடங் களின்மேற் குறி வைத்துச் சுடத்தக்க பெருந் துப்பாக்கிகளால் ஒன்றுரைத் திடுக்கிடும்படி செய்தும், போரியற்றிய ஜெர்மனி யரை மிலேச்சரென்று கூறிய உளப்பான்மையே, உருக்கரந் தும் கடலிலொளிந்தும் விண்ணில் மறைந்தும் போர் செய்யக் கூடியவர்களென்று கருதப்பட்ட ஒரு மக்கட் பகுப்பை, அரக்கரென் றழைக்க ஏவிற்றென்று கொள்ளத்தடையாதுளது?

ஜெர்மனியர்கள் செய்த சில வடாத செயல்களைப்போல் அரக்கர்களுஞ் சில செய்திருக்கலாம். தாங்கள் கற்ற மாய

வித்தையினுலவர்கள் தருக்கித் தாம் விரும்பியவாறெழுகித் தகாதன செய்து மிருக்கலாம். உலக வின்பங்களி லழுந்திக் கிடந்து, கும்பகர்ணனைப்போ லுண்டுறங்குவதிலேயே நாட் கழித்தவராகச் சிலரிருந்திருக்கலாம். அறிவு மாற்றலு மிகுந்த விவருட் பலர் ஆணவம் நிறைந்தவராகி, அகந்தை நிரம்பி வழியு முளத்தினராய் விளங்கினரென்றல் அஃதியற்கையாய் நிகழக் கூடியதுதான். அவுணர்கள் தாங்கள் பெற்ற செல்வத்தையும் வல்லமையையும் நல்வழியிற் பயன்படுத்திக் கொள்ளவில்லை யெனக் குற்றங் கூறிடின், ஒருவகையிலஃ துண்மையே யென் றொத்துக் கொள்வோம். இவைபற்றி யவர்களைக் கரியராகத் தீட்டுதல் தகுதியேயாம். ஆயின், தேவரெனப்படுவோரிதற்கு மாறன வாழ்க்கையு மொடுக்கமு முடையராதல் வேண்டும். ஆனல், இந்திரன், அங்கி, வருணன் முதலிய தேவர் தலைவர்களது நடக்கையையாவது, வித்தியாதரர் கின்னரர், கிம்புருடர் என்ற தேவ கூட்டங்களின் பண்பையாவது பார்க்குமெவரே, அரக்கரைவிடத் தேவர்களுயர்ந்தவர்க ளென்று சொல்வர் ? தேவர்களது செருக்குங் கொழுப்பு மரக்கரது ஆணவத்திற்கு மகந்தைக்கு மெள்ளளவேனுங் குறைந்தனவல்ல. போக நுகர்ச்சியி லிருதிறத்தாரு மொரே நிலையிலிருக்கின்றரென்பது மிகைபட மொழிதலாகாது. இங்ஙனமாயின், அவுணரை யொருவகை யமரரென்றும், அமரரை யொருவகை யவுணரென்றுங் கூறுவதிற் குற்றமென்னை ? இருபகுப்பினரு மொருகுலத்தினரே யென்று நவில்வோருமுளர். காசிபனுக்குத் திதியென்பவளாற் பிறந்தவர்க ளசுரரென்றும், அதிதி யென்பவளாற் பிறந்தவர்கள் தேவரென்றுங் கூறுவதுண்டு. ஆயின், கருப்பரென்றுஞ் சிவப்பரென்று மிவர்களை வகுத்தவாறெவன் ? இருளுக்கு மொளிக்கு முள்ளபகை யாண்டுளது ?

(தொடரும்)

தமிழ்ப்புலவர்கள் நிலைமை

[மொழிநூலாசிரியர் மாகறல் கார்த்திகேய முதலியாரவர்கள்]

ஆங்கிலேய மொழியிற் சிறிது பயின்ற சில தமிழ் நாடர்கள் தமிழ்ப் புலவர்கள் வித்தியாசாலைகளுக்குச் சிறந்த தோருடையும் உடுப்பும் இன்றி வருகின்றார்கள் எனக் கூறியதே யாமும் செவிப் புலனுற்றும். அஃதுண்மையே;

"விரக ரிருவர் புகழ்ந்திடவே வேண்டும்
விரல்நிறைய மோதிரங்கள் வேண்டும்—அரையதனிற்
பஞ்சேனும் பட்டேனும் வேண்டும் அவர்கவிதை
நஞ்சேனும் வேம்பேனும் நன்று"

"அடற்றகையும் ஆற்றலும் இல்லெனினும் தானை
படைத்தகையாற் பாடு பெறும்"

என இவை போன்றன பெரியாரும் கூறியுள்ளார்.

'இரக்கப் போனாலும் பரக்கப் போகவேண்டும்'
'மந்திரம் தெரியாத குருக்களுக்கு மணியோசை பலம்'

என்னும் பழமொழிகளும் அடிப்படுகின்றன.

ஆயின் வித்தியாசாலை நடாத்துபவர்க்கு அநுகூலமாகக் கருதியோ நகை செய்து இகழல் வேண்டுமெனக் கருதியோ தமிழ்ப்புலவர் வினை தடை செய்ததனாலேயோ இன்றியமையாததாகிய ஒன்றுமாத்திரம் எடுத்துக் கூறாது விடுத்தனர் பாவம் பாவம். அங்ஙனம் எடுத்துக் கூறியோர் குலமக்களாதலின் நகை செய்து இகழ்தல் வேண்டுமென்னுங் கருத்துடையாரல்லர் எனத் துணிகின்றோம்.

நகையீகை யின்சொ லிகழாமை நான்கும்
வகையென்ப வாய்மைக் குடிக்கு

என்றலின், மற்றென் செய்யவேண்டு மெனின்:—அக்குல மக்கள் செல்வராயின் வேண்டுவன கொடுத்துப் புலவர்கள்

முகத்தில் தோன்றும் மகிழ்ச்சியைக் கண்டு தாமும் மகிழ்வர். வறியராயின் அன்புடன் இனிது நோக்கித் தாமும் இரங்கித் துன்புறுவர். அது நிற்க, இனி இன்றியமையாததாகிய ஒன்று மாத்திரம் எடுத்துக்கூறுது விடுத்தனர் என்பதைக் கூறுகின்ரும்.

'அருளில்லார்க் கவ்வுலக மில்லை பொருளில்லார்க்
இவ்வுலக மில்லாகி யாங்கு'

'இல்லாரை யெல்லாரு மெள்ளுவர் செல்வரை
யெல்லாருஞ் செய்வர் சிறப்பு'

'அருளென்னு மன்பீன் குழவி பொருளென்னுஞ்
செல்வச் செவிலியா லுண்டு'

'வடுவிலா வையத்து மன்னிய மூன்றில்
நடுவண தெய்த விருதலையு மெய்தும்
நடுவண தெய்தாதான் எய்து முலைப்பெய்
தடுவது போலுந் துயர்'

'ஞானமுங் கல்வியு நாழி யரிசியிலே'

'பணமென்ன செய்யும் பத்துவிதஞ் செய்யும்'

கூண்டிலே குறுணி நெல்லிருந்தால்
மூலையிலே முக்குறுணி செல்வம் கூத்தாடும்'

என்று இவைபோன்றவற்றைச் சிறிதாராயின் எல்லாவற்றிற்கும் பொருளே இன்றியமையாததா யிருக்கின்றது.

'முனிவரு மன்னரு முன்னுவ பொன்னால் முடியும்' என இங்ஙனம் கடந்த பெரியாரும் கூறியுள்ளார். தமிழ்ப் புலவர்கட்கும் அஃது ஒன்றுதான் குறைவுபட்டிருக்கின்றது. அவர்கள் நிலைமை இங்ஙனமாயின் சிறந்ததோருடை முதலியன உடுத்தல் அவர்கட்கு எங்ஙன மியலும்.

'எல்லா மிருக்கிறது பெட்டியிலே
இலைக்கறி கடையச் சட்டியிலே'

எனறபடி அவர்களது பொருளின்மையை மாத்திரம் மெல்ல விடுத்து மற்றைய எல்லாம் எடுத்துக் கூறப்புகுந்தால் தக்க

தோர் மாத வேதனமின்றி மிகப் பரிதாப நிலையில் நின்று வருந்துகின்ற தமிழ்ப் புலவர்கள் என்ன செய்வார்கள். இலக்கண இலக்கியங்களை நன்கு கற்றும் தக்கதோர் மாத வேதனமில்லாமையாற் கவலைப்படுகின்ற சில தமிழ்ப் புலவர்களை யாம் இங்கு எறித்துக் கூறின் மனங்கரைந்து வருந்ாதவர் யாவர்? என் செய்யலாம்?

'நன்றாங்கா னல்லவாக் காண்பவ ரன்றாங்கால்
அல்லற் படுவ தெவன்'

'இடுக்கண் வருங்கா னகுக'

'போதுமென்ற மனமே பொன்செயு மருந்து'

என இவைபோன்றனவற்றை எண்ணி எண்ணித் தான் அப் பொருளின்மையாலுண்டாகும் கவற்சியைச் சிறிது சிறிதாக மாற்றிக்கொள்ளல் வேண்டும். இக்காலத்துத் தமிழ்ப் புலவர் கட்கு அதை விடினும் வேறே வழியில்லைபோலும்.

'இடிப்பொடிந்த கோழிக்கு உரற்குழியே கதி'

"பூவேந்தர் முன்போற் புரப்ப ரிலையெனினும்
பாவேந்த ருண்டென்னும் பான்மையாற்—கோவேந்தன்
மாற னறிய மதுரா புரித்தமிழோர்
வீறனையே சற்றே மித"

"அடடெடுவாய் பலதொழிலு மிருக்கக் கல்வி
அதிகமென்றே கற்றுவிட்டோ மறிவில் லாமல்
திடமுளமோ கனமாடக் கழைக்கூத் தாடச்
செப்பிடுவித் தைகளாடத் தெரிந்தோ மில்லை
தடமுலைவே சையராகப் பிறந்தோ மில்லை
சனியான தமிழைவிட்டுத் தைய லார்தம்
இடமிருந்து தூதுசென்று பிழைத்தோ மில்லை
என்னசென்மம் எடுத்துலகி லிரக்கின் றோமே"

என்ற இச்செய்யுள்களையும் நோக்கின் பொய்யாமொழிப் புலவர் படிக்காசுப் புலவர்கள் காலத்திலேயே தமிழ்ப்புலவர்கட் குரிய

செல்வப் பெருக்கு உள்ளங்கை நெல்லிக்கனிபோல நன்கு புல னாகின்றது.

தமிழிலே பிறந்து தமிழையே யுண்டு தமிழிலே வளர்ந்து தமிழையே பேசும் தமிழ்ச் செல்வர்க ளனைவரும் அச்செய்யுள் களையும் நினைதொறும் நினைதொறும் தலை கவிழ்ந்து செல் லத் தக்கதோர் செயலே யன்றோ? மலையாளம் மைசூர் முதலிய சுதேச ராஜப் பிரபுக்களும் சமஸ்கிருத பண்டிதர்களுக்கு மாத் திரம் உதவி செய்கின்றார்களே யன்றித் தமிழ்ப் புலவர்களுக்கு ஒரு சிறிதும் உதவி செய்கின்றார்களில்லை. தமிழ்ச் செல்வர்கள் அதனைக் கண்ணுற்றும் செவியுற்றும் அங்ஙனம் செய்கின்றார்க ளில்லை: இதனை எவரோடு சொல்லலாம்? காலக் கொடுமை யென்றே கருதல் வேண்டும்.

தமிழ்ச் செல்வர்கள் வைதிக காலங்களிற் புரோகிதர் சங் கீதப் புலவர் விகடகவி முதலியோருக்கு மரியாதை செய்கின் றார்களே யன்றித் தமிழ்ப் புலவர்களைக் கௌரவப்படுத்தி ஒரு மரியாதையும் செய்யக் கண்டிலோம் கேட்டிலோம். சிலர் செய் யினும் சங்கீதப் புலவர் முதலியோருக்குச் செய்ததிலும் பெரி தும் குறைவாகவே காணப்படும். இஃதென்னை பாவம்! பாவம்!

தமிழ் நாட்டுப் பெருஞ் செல்வர்களிற் சிலர் ஒருப்படின் மதுரையின்கணிருந்த தமிழ்ச் சங்கம்போல ஒன்றேனும் நிய மித்துக் காத்துவரல் அரிதாகுமோ? இங்ஙனம் ஒருப்பட்டுச் செய்யின் தமிழ்நாடு தமிழ் நாடாகித் தமிழ் மணங்கொண்டு எல் லோர்க்கும் புகழும் புண்ணியமும் விளைவித்தல் திண்ணம் திண் ணம்! திருவருளும் இங்ஙனமே கூட்டுக.

மாணவர்கள் தமிழ்ப் புலவர்களை அவாவுகின்றிலர் என் கின்றனர். நன்று. தமக்குரிய மனைவியை விட்டு அயலார் மனை வியை விரும்பி முயல்வதுபோலப் பதி பசு பாச இலக்கணங் களை ஆராய்ந்துணரத் தமக்குரிய தமிழ் மொழியைக் கல்லாமல் அவமதித்து விட்டுப் பொருள் புகழ் ஒன்றே விரும்பி ஆங்கி லேய பாஷை யொன்றையே பெரிதும் முயன்று கற்குமாணவர் கள் தமிழ்ப் புலவர்களை எங்ஙனம் அவாவுவாராவர்?

"புகழ்பொருள் பற்ருகப் போற்றிய கல்வி
இகழப் படுவன வென்றிசினே ரான்ரோர்"

தமிழ்நாட்டிற் சிலர் இந்து மகா வித்தியாசாலை யென்று பெயர் மாத்திரம் வைத்திருக்கின்றனர். அதில் தமிழ்ப்புலவர்களிலர். இருக்கினும் மாத வேதனம் சில; அச் சிலவும் மாதந்தோறும் கிடைப்பதரிது. அதிகாரம் செய்வதற்கு மாத்திரம் பற்பலர் எழுவர். மாத வேதனமென்ருல் ஒருவரும் பேசார். இஃதென்னை! இந்து மகா வித்தியாசாலை யென்று பெயர் வைத்ததற் கேற்ப மற்றும் ஒரு தமிழ்ப் புலவரை நியமித்துத் தமிழை வளர்த்தாலன்ரே தகுதியாகும். மாம்பழ முண்ணுத ஒரு பறவைக்கு மாம்பழவுண்ணி எனப் பெயர் வந்ததுபோலிருக்கின்றதே என்னை!

தமிழ் மொழியில் தருக்க முதலிய நூல்கள் பெரிதும் இல்லை. அவையிற்றை இக்காலத்தில் எழுதுவாருமிலர் என்கின்றனர். இக்காலத்தில் ஆங்கிலேய பாஷையில் அவ்வகைப்பட்ட நூல்கள் தோன்றியதற்குக் காரணம் என்னை? அதனைச் சிறிதாராய்வாராயின் அங்ஙனம் சொல்லப் புகார். அவ்வகைப்பட்ட நூல்களை மாத்திரமல்ல, அவற்றினு நுட்பமாகிய நூல்களைப் பெரிதும் எழுதவல்ல தமிழ்ப் புலவர்கள் இக்காலத்துமிருக்கின்றனர்.

அவர்கட்கு வேண்டிய பொருளுதவி செய்து அவ்வகைப்பட்ட நூல்களை எழுதுவித்தல் வேண்டுமென்று தமிழ்நாட்டுப் பெருஞ் செல்வர்கள் சிறிதும் கருதுகின்றிலர். தமிழ்நாட்டின் பரம்பரைப் பெருஞ் செல்வர்களும் இருக்கின்ருர்கள். அச்செல்வர் தம் பிள்ளைகளும் மேலும் மேலும் ஆங்கிலேய பாஷையேயன்றிக் குலமொழியாகிய தமிழ் மொழியைக் கற்று உணர்ந்து உரைத்துக் கேட்டுப் பழைய நூல்களைச் செல்வாக்கிலேருத வண்ணம் பலபலவாக அச்சிற் பதிப்பித்தும் ஏட்டில் எழுதுவித்தும் செல்வாக்கில் வைக்கின்ருர்களிலர்.

பெரிதும் செல்வப் பெருக்கில்லாத தமிழ்ப்புலவர்கள் இவ்வெண்ணங் கொள்வதனுற் பயனென்னை?

செல்வப் பொருளோ சிலவாதற் பாலன
பல்வகை யாகும் பசிப்பிணியான்—ஒல்கிய
மக்களோ பற்பலர் மாநிலத்துச் செல்வம்
தக்காங்கு நேடத் தகும்.

ஞானபோதினி.

மாதர் பேதையரா?

[திரு. S. இராமச்சந்திரனவர்கள்]

1. இயற்கையே இறைவனது நிறைவென்றும், இயற்கையின் எழிலே இறைவனது உருவென்றும்; இயற்கையைக் கண்டு வியக்குந்தோறும் பயக்கும் இன்பமே எவ்வின்பத்திலும் தலையென்றும், இயற்கை நிகழ்த்தும் நெறியே இறைவனது நெறியென்றும், எனவே அவ்வியற்கை நலத்தோடு இசைய இசைந்து வாழ்பவரே படைப்பினது பண்பின் பயனறிந்து ஒழுகும் இன்புடையோரென்றும் கூறுங் கொள்கையைச் சொல்லளவிலேனும் மறுப்பார் இவ்வுலகில் எவருமிலர். இயற்கை நலத்தோடு கூடி வாழும் வாழ்வே வாழ்வெனின், அவ்வியற்கை நலம் பல பெரிதும் கவிந்து நிற்கும் பொருள் எதுவென்று நோக்குங்கால் பெண் மக்களென்றே எம்மக்களும் கூறுவர். ஐய நுண்ணிடைத் தையலார் தம் அழகின் நுட்பம் யாரே அறிவர்? குழலியர் அழகினை உள் நின்ற ஆண்டவனின் ஒளி வடிவெனக் களிகொள்வதை விடுத்து, மடவார்தம் உடலின் வளமென மயங்கி அவர் மயக்க வலையிற் றயங்குதல் கயமையின்பாற் பட்டதே. "மாதரைக் காதற் கழிவிடமென் றெண்ணி, அவர்தம் இடையை நோக்குவதை விடுத்து அவர்களை அண்ணலின் அன்பு நிலையாம் பெண்ணென்று அறிய வேண்டுமென்ற" நுண்ணிய உரை நோக்கற்பாலதே. பெண் மக்கள் தம்மகத்தேயுள்ள இறைவன் திறமாகிய அறிவு விளக்காம் அழகு கொண்டு நம்மை இறைவனோடு இணைத்தலும் கூடும். இவைகளை நோக்கியே மாறுபட்ட சமயத்தோரும் வேறுபடாது நல்லறமென்று நயக்கும் இல்லறத்திற்குப் பெண் மக்கள் இன்றி

யமையாதவர் என்பர். இத்தகைய மாதரார்க்குப் பேதையர் என்று பட்டம் கட்டியது எம்மட்டில் பொருந்துமென்பதை இக்கட்டுரையின்கண் ஆராய்வாம்.

2. "பேதைமை என்பது மாதர்க் கணிகலம்" என்னுமோர் அரிய அறவுரை யாவர்தம் வாயிலும் காற்றாய் உலாவுவதைக் காண்கின்றோம். எக்கருத்துடன் இவ்வுரையை யாவரும் கையாளுகின்றனர் என்று கவனிக்குமிடத்து, "மாதர் யாவரும் அறிவில்லா மாக்கள்." என்னும் எள்ளத் தக்கதோர் கருத்தே கொள்ளக் கிடைக்கின்றது. எண்ணறக் கற்பினும், எழுத்தற ஓதினும், "பெண்புத்தி என்பது பெரும்பே தைமைத்தே" என்ற ஓர் உரை உண்டாயதும் இக்கருத்தை அறிவுறுத்தும் ஒரு சாரர் கொள்கையே போலும்.

3. மாதர் தம் மனத்தினிடத்து ஒரு புறத்தே சிறிதளவு மயக்கமும் தியக்கமும் உடையவராயினும், அதன் ஆழத்தே தெளிவும் உறுதியும், அன்பும் உடையவராவர். எவ்வகையிலும் திட சித்தமும் நோக்கத்திற் கேற்ற கருமமும், கருமத்திற் கேற்ற ஒழுக்கமும் கையாள்பவர் மைவிழியாரே. தனக்கென வாழும் தன்மையையுடைய நம்மை, மனக்கினி அன்பு பாராட்டச் செய்பவர் மாதரே. பொறுமையையும், அமைதியையும் புகட்டி நம் சிந்தையைத் தெளிவிப்பவரும் பைந்தொடியாரே. பந்த முறும் மாந்தரின் சிந்தையைச் சாந்தி செய்வோரும் ஏந்திழையாரே. காதலிலேனும், கற்பிலேனும், மற்றும் ஏனைய ஒன்றைச் செய்யப்புகினும் சமய சாமர்த்தியமாக நடந்துகொள்ள வல்லவர் மடந்தையரே. ஆடவரோ, மிகவும் மிடுக்கான நிலைகளில் மனமொன்று எண்ண, வாயொன்று பேச, கையொன்றுசெய்ய, மெய்யொன்று சார, கண்ணொன்று நோக்கக் கடந்துழல்வர். இவர்கள் பிடிக்கும் பிள்ளையாரெல்லாம் சுள்ளிக் குரங்காகவே முடியக் காண்கின்றோம்.

4. இதிகாசங்களில் ஒன்றாகிய இராமாயணத்தை எடுத்துக் கொள்வோம். கைகேசியின் முன் தசரதன் பேதையாகின்

றான். சீதைக்கு முன் இராமன் பொய் மானால் பிரிந்தபோதும், பின்னர் சிறை தவிர்த்துச் சேர்ந்தபோதும் பேதையாகின்றான். நிந்தனையிலா ஐந்தாம் வேதமெனக் கொண்டாடும் பாரதத்தைப் பார்க்கின், பாஞ்சாலியின் முன் பாண்டவர் பல் வேறிடங்களில் பேதையராவதைக் காணலாம். சாவித்திரியின் முன் ஆவி கவர்வோன் பேதையானதும் பேசத்தக்கதே. தேயசரித்திர நூற்களை நோக்கின், எவ்வளவோ அறிவும் ஆண்மையும் வாய்ந்த ஆண்டகையோரும் பெண்டிரிடம் பேதையரான பெட்பு தோன்றும். நிகழ்கால வாழ்க்கையில், எண்ணிறந்த ஆடவர் பெண்டிர் முன் பேதையராவதைக் கண்கூடாகக் காண்கின்றோம்.

5. பன்னயம் கெழுமிய நன்னயப்பாக்கள் பலவுள. புறநானூற்றில் கூறியுள்ள, "போர்க்குச் சென்ற தன் தந்தையும் தலைவனும் அந்தகனூர் அடைந்தனர்" என்றதைக் கேட்டதும் சற்றும் வாட்டமுறாது பால் மணமறாத மைந்தனையும் பாசறைக் கனுப்பிய பாவையின் செய்தியையும், "செல்வச் சிறுவன் செருவில் மாய்ந்தான்" என்று செவியுற்றத் தாயொருத்தி, "முதுகில் வடுவுண்டிருப்பின் முலையது துணிப்பன்" என்று உருவிய வாளுடன் போர்க்களம் ஓடிய செய்தியையும் கேட்டு யார்தான் பெண்களைப் பேதையர் என்று அழைக்க ஒருப்படுவர். ஆ! என்ன வீரம், என்ன திடசித்தம், என்ன உறுதி, முல்லை நிலத்துறையும் இல்லாளொருத்தி, தன் கொழுநனுக்கு அட்டிற்றொழில் புரியும் ஓவியத்தைக் கூறும்

"முளிதயிர் பிசைந்த காந்தள் மெல்விரல்
கழுவுறு கலிங்கம் கழாஅ துடீஇக்
குவளை உண்கண் குய்ப்புகை கமழத்
தான்துழந் தட்ட தீம்புளிப் பாகர்
இனிதெனக் கணவன் உண்டலின்
நுண்ணிதின் மகிழ்ந்தன் றொண்ணுதல் முகனே."

என்ற செய்யுளைச் சிந்திக்கின் பெண்கள் பேதையரா? என்பது நன்கு புலனாகும். கொழுநன் வெளியே போயிருக்கிறான், வருகிற நேரமாகி விட்டது, அவன் பசியோடு வருவானே என்று பரி

வுடன் சோறு விரைவில் சமைக்கின்றாள். ஏழைக் குடும்பமா? அல்லது வேறு ஆட்களில்லையா அத்தொழில் புரிய? கலிங்கப் புடவை உடுத்திருப்பவளாதலால் ஏழையன்று. மற்றேதோ வெனின், தன்னில்லத் துறையும் ஏனையர் செய்யும் அட்டிற் றொழிலால் ஒரு சமயம் உணவின் சுவை குன்றித் தன் கொழு நனுக் கேலாததாகி விடுமோவென்று தானே சமைக்கின்றாள். வேலை செய்யப் பிறந்தவளா? குவளைப்பூப் போன்ற கண்களையும் காந்தள் பூப்போன்ற மெல்லிய விரல்களையும் உடைய மெல்லியாள். அங்ஙனமிருந்தும் தன் கொழுநன் மேலிருக்கும் அன்பினால் அடுப் பூதுகின்றாள்; சட்டி சுரண்டுகின்றாள்; காந்தள் பூப்போன்ற தன் மெல்லிய விரல்களால் கட்டித் தயிரினைப் பிசைகின்றாள். எனவே கை விரல்கள் சிவக்கின்றன. கணவன் வரும் நேரமாகி விட்டதே என்று விரைவுடன் சமையல் வேலை செய்கின்றாள். அதனால் ஆடை நெகிழ்கின்றது. எடுத்து இடுப்பில் செருகுவ தென் றாலோ கை யெல்லாம் தயிராக இருக்கின்றது. கை கழுவி செருகுவதென்றாலோ காலமாகி விடும். இன்னுயிர்க் காதலன் இன்னுமா காத்திருப்பது? ஆடை அழுக்கானாலும் ஆகட்டு மென்று அந்தத் தயிர் பிசைந்த கையினாலேயே ஆடையை உடுத் திக் கொள்ளுகின்றாள். பிசைந்த தயிரினைத் தாளிப்புச் செய் யுங்கால் அதனின் றெழும்புகை தன் கண்களில் கப்பிக் கொள்ளு கிறது. அதற்காக அப்புறம் இப்புறம் திரும்புவாளா? முகத்தை யேனும் சுளிப்பாளா? திரும்பினால் பதங் கெடுமென்று குனிந்தது குனிந்த வண்ணமாக அடுப்பி லேற்றிய சட்டியிலேயே கண்ணுங் கருத்துமாக இருக்கின்றாள். பதஞ் சிறிது கெடினும் தன் செல் வக் கொழுநனுக்காகாதென்று, அற்றம் பார்த்து இறக்குகின் றாள். தானே ஆக்கி இறக்கிய அமுதினை அகமுடையான் வயிறார உண்டு "மிக நன்றாக இருக்கின்றது" என்று விருப்புடன் இன்னும் இரண்டு கை இனிதாக உண்பதைக் கண்டு மனமகிழ் கின்றாள். அன்பனின் தன்மையைக் கண்டு தலை கீழாகக் குதிக் கின்றாளா? இல்லை. உள்ளுக்குள்ளே உள்ள ஓர் களி அவளது நளின முகத்தில் ஒளிவிட்டுப் பொலிகின்றது. ஆ! என்ன அன்பின் ஆழம்! ஒழுக்கத்தின் உயர்வு! இவ்வாறு தன் உடல் நலத்தைச்

சிறிது முன்னாது தன் கொழுநனைப் பெரிதும் பேணி மகிழும் தன்மையை யுடைய பெண்களைப் பேதையர் என்று பேசவும் நாவெழுமா? மாதவியையும் கண்ணகியையும் பேதையரென்று பித்தரும் பேசார்.

6. ஆயிழையார் மாட்டு அறிவினது நுணுக்கம் அமைந்ததுபோல் யாவர் மாட்டும் இல்லவே இல்லை. கல்விக் கடவுளாம் நாமகளைப் பெண்மகளென் றறிந்தவர் பெண்களைப் பேதையர் என்று பேசக் கூசவேண்டாமா? பெண்ணின் இலக்கணத்தைக் கூறவந்த நரைமுதாட்டி "....................விறன் மந்திரி மதியும் பேசில் இவை யுடையாள் பெண்." என்றார். மாதரார் மதிக்கு மந்திரி மதியை உவமித்தது மாண் புடைத்தே. வேதத்தை "மறை" என்றதுபோல் அறிவுசால் தெரிவையரைப் பேதையர் என்று நவின்றனர் போலும். ஆழ்ந்த அன்பும், அன்பிற்கேற்ற அறிவும் வாய்ந்த மாதராலேயே இந்நானிலம் நடை பெறுகின்றது என்று கொள்ளலும் மிகையாகாது. பெண்களின் பெருமையின் அருமையைக் கருதாது, அவர்களை அவமதிப்பது அறிவுடையார் செயலன்று. புருஷனைத் தனியாக விட்டு விட்டால் குரங்கின் கைப்பூமாலையைப் போல் இல்லற வாழ்க்கையை அல்லற வாழ்க்கையாக ஆக்கி விடுவான். இவ்விதமெனில் "பேதைமை என்பது மாதர்க் கணிகலம்" என்னும் உரையைப் பொய்யுரை யாக்கி நையாடல் வேண்டாம். அத்தொடரிலுள்ள "அணிகலம்" என்னு மச்சொல்லே அவ்வுரையை நல்லுரையாக்குகின்றது. எவ்விதமெனில் பெண்மைக்குப் பேதைமை இயற்கையா யமையாதது. வேண்டும்போது எடுத்தணிய வல்லவோர் அழகு செய்யும் ஆபரணமே யாகும். இனிப் பெண்மைக்குப் பேதைமை அணிகலமாகும் அமைதியைச் சற்று நோக்குவாம்.

(தொடரும்)

திருவள்ளுவர்—ஒரு மரநூற் பேராசிரியர்

[திரு. அ. மா. முத்தையா நாட்டாரவர்கள்]

(௩௭௪ - ம் பக்கத் தொடர்ச்சி)

இச்சரித்திரச் சான்றுகளே இக்குறளின் பெற்றியை விளக்கும். நம் பண்டைத் தமிழ்மக்கள் ஆராய்ச்சித்துறையிலும்; இயற்கையின் தோற்றத்தி னுண்மை யறிதலினும்; அடைந்திருந்த வுன்னதப் பெற்றியின் நிலையினின்றும் நாம் நீண்டகாலத்திற்கு முன்னமே நழுவி நாளடைவில் கீழூற்றுவரும் வழியில் புராணக்கூற்றின் புதர் வன முற்றுப் பல்வகையிற் சிக்குற்று உண்மைவெளி காணாது உழல்கின்றோமாதலின் நம் தமிழ்மக்கள் அகத்துறையில் கண்ட முடிபுகளனைத்தையும் திரட்டி ஒரு திருட்டாந்தத்தால் சுருங்க விளக்குமிக் குறளினுண்மை காணாது மயங்குதலியல்பே. எனினும் நம்முன்னோரும் பின்னோரும் கண்ட பொருள்களை மறுக்கவும், அவைகளிலும் சிறப்புரை காட்டவு மெழுந்ததன்று இக்கட்டுரை. மற்று இக்குறளில் எடுத்துக்காட்டிய உவமானமும், உபமேயமும் மிகவும் இயைந்து நிற்றலால் அவைகளை விளக்குதற்கும் தற்கால நுண்ணூலாராய்ச்சியாளர்கள் (Men of science) பல துறைகளில் கண்டதும், உலகம் ஒப்புக்கொண்டதுமான சில சில முடிபுகள் கொண்டு இக்குறளை யாராய்ந்து இக்குறளின் பெற்றியை விளக்குதற்கும், இக்குறளில் திருவள்ளுவர் காட்டிய சில மரநூலிலக்கண முடிபுகளை விளக்குதற்கும், நம்முன்னோரில் பதின்மர் கண்ட வுரைகளில் இழந்தன ஒழிய, எஞ்சி நிற்கு மிருவருரைகளை யொருசிறி தாராய்வாம்.

இக்குறளுக்கு நம்முரையாசிரியர் **பரிமேலழகியார்** 'மனத்தின்க ணன்பில்லாத வுயிர் இல்லறத்தோடு கூடி வாழ்தல், வன்பாலின்கண் வற்றல் மரம் தளிர்த்தாற்போலும்' என்று பொருள் கூறுகின்றார். மற்று நம் **மணக்குடவரோ** "தன்னிடத்து அன்

பில்லாத உயிரினது வாழ்க்கை வலிய பாரிடத்து உண்டாகிய உலர்ந்த மரம் தளிர்த்தாற்போலும்" என்று பொருள் கூறுகின்றார். இவ்விரு உரையாசிரியருரைகளும் ஒன்றற்கொன்று பல வேறுபட்ட கருத்துடையனவாகக் காணப்படுகின்றன. அவ் வேறுபட்ட கருத்துகள் கீழ்க் காட்டிய முறையில் வகுக்கப் படும் :—

i. அன்பகத்தில்லா வுயிர்.
ii. வாழ்க்கை.
iii. வன்பாற்கண்.
iv. வற்றன் மரம்.
v. தளிர்த்தல்.

ஒரு குறிப்பு

இக்குறளின் பொருளை யாராயுமுன் திருவள்ளுவர், தானருளிய குறளில், பல துறைகளின் நின்று, பல பொது விலக்கணங்களை வகுத்திருக்கும் பல குறிப்புகளில், இயற்கை யிலக்கணத்தை வகுத்துக்காட்டும் ஒரு பெருங் குறிப்பு கவனித்தற்குரியது. குறளுக் குரைகண்ட பேராசிரியர்கள் இக்குறிப்பை முன்னோக்கிப் பொருள் கண்டனராகப் பெரும்பாலும் காணப்பட்டிலர். ஆதலின்இக் கட்டுரையைப் படிக்கும் அன்பர்கள் இக் கட்டுரையின் கீழ்க்காட்டும் குறிப்பு பொருத்த முடையதோ? அன்றோ? என்பதை யாராய்ந்துகொள்ளுக. நூலாசிரியர் திருவள்ளுவர் "அன்புடைமை" என்னு மதிகாரத்தில் மூன்று குறள்களில் உயிரெனப் பொதுப்படவும், மூன்று குறள்கள் பொதுவாகவும் கூறி நான்கு குறள்களில் மட்டும் சுட்டுப் பெயரால் குறிக்கின்றார், மற்றும், சில வதிகாரங்களில் ஒன்று அல்லது இரண்டு குறள்களில் மட்டும் உயிரெனப் பொதுப்படக் கூறி மற்றவைகளில் சுட்டுப்பெயரால் குறிக்கின்றார். காட்டாகப் 'பெருமை' என்னும் அதிகாரத்தில்,

"பிறப்பொக்கு மெல்லா வுயிர்க்குஞ் சிறப்பொவ்வா
செய்தொழில் வேற்றுமை யான்"

என்று ஒரு குறளில் மட்டும் உயிரெனப் பொதுப்படக் குறிக்கின்றார். மற்றும், 'எல்லா' என்னும் அடைமொழி 'உயிர்க்கு' முன்மிகவுமணிபெற வமையப் பெற்று நிற்றல் மிகவும் கவனித்தற்குரியது. இங்ஙனமே சிலவதிகாரங்களில் ஒன்று அல்லது இரண்டு குறள்களில் உயிரெனப் பொதுப்படக் கூறியுள்ளதை யாங்காங்கு கண்டுகொள்க! மற்றவதிகாரங்களில், எல்லாக் குறள்களையும் சுட்டுப் பெயராலோ, அன்றிப் பொதுப்பட உயிரென வலிந்து காட்டாமலோ, குறிக்கின்றார்; காட்டாக வாழ்க்கைத் துணை நலம்; புதல்வரைப்பெறுதல்; வெகுளாமை; தூது; முதலியவதிகாரங்களில் கூறியுள்ளதையறியவும். இங்ஙனம் சிலவதிகாரங்களில் சிலகுறள்களில் மட்டும் உயிரெனப் பொதுப்படவும் மற்றக் குறள்களில் சுட்டுப் பெயராலும் கூறுதல், ஏதேனும் பொருள்கொண்டு கூறியிருப்பரேயன்றி, ஒருபொருளு மின்றிக் கூறியுள்ளாரெனக் கொள்ளுதலெங்ஙனம்? நிற்க, குறளிலுள்ள எல்லா வதிகாரங்களிலுமாராயின், சில வதிகாரங்களில் மட்டும், ஒன்று அல்லது இரண்டு குறள்களில் உயிரெனக்கூறியுள்ள, நம் ஆசிரியர், 'அன்புடைமை' என்னு மதிகாரத்தில், தொடர்பாய் மூன்று குறள்களில் உயிரெனவும்; மூன்று குறள்களில் பொதுவாகவும் கூறுதல் உற்று நோக்கின், யாவர் கருத்தையும் கவரும் கருத்துத் தோன்றுதலுடன், திருவள்ளுவரும், இங்ஙனம் வகுத்த முறையாதேனும் ஒருபெருங்குறிப்புக்கொண்டுஅருளி யிருப்பாரென்பதுதெற்றெனவிளங்கும்; அங்ஙனம் யாதேனும் பொருளைக் கண்ணழித்துக் கூறியிருப்பின், அப்பொருள் யாதெனவுருவியாராய்தல் முறையே யன்றி, பொதுப்படக்கூறிய சொல்லினைத்தையும், ஆகு பெயராகக் கொண்டு மக்களுக்கே பொருள் கூறின், உண்மை காணாது மறைகின்றதன்றோ? திருவள்ளுவர் மக்களுக்கே சிறப்புறத்தான் திருக்குறளை அருளினரென்பது யாவரும் ஒப்புக் கொள்ளுதல் ஒருதலை. ஆகிலும், மக்களுக்கேசிறப்புறக்கூறிய நூலில், மக்கள்தவிர மற்றப் பல்லுயிரிடம் கண்டபொதுவிலக்கண முதலியுவைகளை யாராய்ந்துள்ளாரெனக் கொள்ளில் இழுக்கென்னை? தோற்றத்தினின்று உருவி உள் சென்று உண்மையின் நாப்பணின்றாராயு மாற்றலுடைய, திருவள்ளுவர்

போன்றவாசிரியர் இடையறாது பல்லுயிரின் நாப்பண் தொடர் பாய்க்கொண்டு கொடுத்து வாழும்மக்களை, மற்றப்பல்லுயிரி னின்றும், தனித்தெடுத்தாராய்வரோ?நிற்கநம்பண்டைத்தமிழர் இயற்கையிலேயே நின்று பல்லுயிர்த்தொகுப்பில், வேறுபட்டுக் காணுறும் பல்வகையிலக்கண முதலியவற்றைக் களைந்து, எல் லாவுயிர்க்கும் பொதுப்பட்ட மத்தியநிலையெய்தி, அந்நிலையி னின்று, தாங்கள் நூலியற்றியுள்ளார்களென்பது சங்கநூல்களில் விரிவாய்க்காணலாம். உயிர் தோன்றி யொடுங்குமியல்புடைய தென்று கண்டனர். உயிர் தன் தொழில் வேற்றுமையான், சிறப்புற்றும், சிறப்புறுமலும் தோன்றுமெனக் கண்டனர். உயிர் வகுப்பனைத்தும், தனித்தனிக்கடவுளால் படைக்கப் படவில்லை யென்பதும், ஒவ்வொன்றும் தொடர்புடையதென்பதும் நம் தமிழர் கண்டனர். உயிரனைத்தும், உலகில்காணுறுதல் போலவே, படைக்கப்பட்டன வென்பது மேனாட்டார் மதம். நுண்ணூலா ராய்ச்சி மிகுந்த விந்நாளில் மேனாட்டாரு மிக்கொள்கையை மறுக்கின்றனர். மேற்காட்டிய, தமிழர்கண்ட சில வுண்மைகளை மட்டும் கொண்டாராயின், சிறப்புற்ற மக்களுக்கும், மற்றப் பல்லுயிர்க்கும், தொடர்பிருத்தல் முறையே; மக்களுக்கும் மற்றப் பல்லுயிர்க்கும், ஒற்றுமை காட்டும் குணம், நிகழ்ச்சிகள் சிறப்புற்ற முறையில், கீழ்தரவகுப்பில், காணுறும் சிலவன்றி, மக்கள்பாற் சில புதியன காணுதலும் முறையே! இங்ஙனம் பல் வேறு முறையில், இப்பல்லுயிர்த் தொகுப்பில், தொடர்புற்றும் சிறப்புற்றும், புதிதுற்றும், காணுறும், இயல்பு, குணம், நிகழ்ச்சி முதலியவைகளைக் கண்ணழித்து, சிறப்புமுறையில் மக்களுக்கே வியற்றிய குறளில், ஆங்காங்கு உயிரின் பொது விலக்கண முதலியன கூறுகின்றார். இம்முறையில் கூறுமிடத்து, மரம், விலங்கு என்னும் இருபெரும் உயிர் வகுப்பிற்கும் பொதுப்பட 'உயிர்' எனக்கூறுவர். காட்டாக :—

"பிறப்பொக்கு மெல்லா வுயிர்க்குஞ் சிறப்பொவ்வா
செய்தொழில் வேற்றுமை யான்"

"அவாவென்ப வெல்லா வுயிர்க்கு மெஞ்ஞான்றுந்
தவாஅப் பிறப்பீனும் வித்து" என்றும்,

"ஊனுடை யெச்ச முயிர்க்கெல்லாம் வேறல்ல
நாணுடைமை மாந்தர் சிறப்பு"

என்றும் கூறிய குறள்களில், மரம், விலங்கு என்ற இரு பெரும் உயிர்த் தொகுப்பைச் சீர்தூக்கி யாராயு முறையில் 'உயிர்' எனப் பொதுப்படக் கூறியுள்ளதைக் காண்க! நிற்க, விலங்குவகுப்பில் சிறப்புற்றிருக்கும் மக்களையும்,எஞ்சிய விலங்குகளையும் சீர்தூக்கு முறையில் 'உயிர்' எனப் பொதுப்படக் கூறுவர், காட்டாக :—

"காக்கப் பொருளா வடக்கத்தை யாக்க
மதனினூஉங் கில்லை யுயிர்க்கு" என்றும்

"இகலென்ப வெல்லா வுயிர்க்கும் பகலென்னும்
பண்பின்மை பாரிக்கு நோய்"

என்றும், கூறிய குறள்களில், மக்களையும், எஞ்சிய விலங்குகளையும் சீர்தூக்கி யாராயு முறையில் 'உயிர்' எனப் பொதுப் படக் கூறியதைக்காண்க. நிற்க, நம்மாசிரியர், விலங்கு வகுப்பின் ஒரு பகுதியையும், மக்களையும் சீர்தூக்கி யாராயு முறையில் 'உயிர்' எனப் பொதுப்படக் கூறுவர். காட்டாக :—

"அன்போ டியைந்த வழக்கென்ப வாருயிர்க்
கென்போ டியைந்த தொடர்பு"

என்று கூறி, மக்களையும், விலங்கின் ஒரு பகுதியையும் சீர்தூக்கி யாராய்ந்து நிற்கும் முறையைக்காண்க. நிற்க, மக்களையே பொதுப்பட வாராயுங்கால், மக்கள் தொகுப்பில் சிறப்புற்றும், சிறப்புறுமலும் காணுறும் பல வகுப்புகளைக் கண்ணழித்து, 'உயிர்' எனப் பொதுப்படக் கூறுவர். காட்டாக :—

"எண்ணென்ப வேனை யெழுத்தென்ப இவ்விரண்டும்
கண்ணென்ப வாழு முயிர்க்கு"

என்னும் குறளில், மக்களைப் பொதுப்பட வாராயுங்கால், பொதுப்பட 'உயிர்' என்று கூறியது காண்க; நிற்க, உயிர்

நிலவும் சூக்கும உடலின் நிலையில் நின்றுராய்ந்து அதின் குணம் இயல்பு, முதலியன பொதுவில் குறிக்குங்கால் உயிரெனப் பொதுப்படக் கூறுவர். காட்டாக :—

"அன்பின் வழிய துயிர்நிலை யஃதிலார்க்
கென்புதோல் போர்த்த வுடம்பு" என்றும்,

"மாறுபா டில்லாத வுண்டி மறுத்துண்ணி
னூறுபா டில்லை யுயிர்க்கு"

என்றும், உயிர் நிலவுஞ் சூக்கும வுடலினின் றுராயுங்கால், உயிரெனப் பொதுப்படக் கூறியுள்ளதைக் காண்க. இங்ஙனம் ஆசிரியர் திருவள்ளுவர் பொதுப்பட "உயிர்" என்று கூறு மிடங்களில், தான் பற்பல துறைகளினின் றுய்தற் கேற்ப, ஒரு சிறு வகையையோ? அன்றி ஒரு பெரும் தொகையையோ? கண்ணழித்துப் பொதுப்பட 'உயிர்' என்று கூறியுள்ளா ரென் பதை யறியவும். அங்ஙனம் கூறும் 'உயிர்' என்னும் பொதுச் சொல்லிற்கு, உண்மை யறிந்து அத் துறைக்கேற்ப, பொருள் வருவித்துக் கூறுதலே முறையாகும். அன்றி, பொதுவில் 'உயிர்' என்று குறிக்கும் சொல்லை, ஆகு பெயராகக்கொண்டு, மக்களைக் குறித்ததாகப் பொருள் கூறின், அவ்வுரை இயற்கைக்குமாறு படுதலுடன், ஆசிரியர் காட்டும் மிகவுமாழ்ந்த கருத்துக்களை, உருவிக் கொணர்ந்து உண்மை விளக்காத முறையாகும்.

(தொடரும்)

—

அறிவுடை நம்பி

[திரு. மு. சி, பூர்ணலிங்கம் பிள்ளையவர்கள் பி. ஏ. எல். டி.]

இப்பெயர் பூண்டவர் பழம் பாண்டிய மன்னரிலொருவர். இவர் சிறந்த அறிவுடையராதலின் அப்பெயர் பெற்றனர்போலும். நம்பி என்பதற்கு அகராதியில் 'அரசமாதைப் பார்ப்பான், இராக்கதமணஞ் செய்யப் பிறந்து விட்டுணுவை யருச்சிப்போன், புருடரிற் சிறந்தோன்' என்று பொருள் காணப்படுகின்றது. அன்றியும் நம்பி என்ற பெயர் அகத்திலக்கணஞ் செய்த புலவருக்கும், வேடவரசனுக்கு மிருந்தமையால் 'அறிவுடை' என்ற அடைமொழி கொடுத்துப் பாண்டிய வரசனைப் பிரித்துக் காட்டப்பட்டிருக்கின்றது. இவ்வரசன் காலத்தில் (இரும்) பிசிராந்தையரென்ற புலவர் வாழ்ந்தனரென்றும், அப்புலவரால் பாடப்பெற்றவர் இவ்வரசனென்றும் புறப்பாட்டுச் செய்யுளால் அறிகின்றனம். பிசிரென்பது பாண்டியநாட்டிலுள்ள வூரின் பெயராகும். இப்பிசிராந்தையார் கோப்பெருஞ் சோழனுடைய உயிர்த்தோழரென்றும் 'அவ்வரசன் இல்லறந் துறந்து வடக்கிருந்து உயிரிழந்து கல்லாயினனென்று கேள்விப்பட்டதும் தாமும் தம் முயிரைத் துறந்தனரென்றும் அறியக் கிடக்கின்றது. இதனுல் முற்காலத்தில் புரவலர்கட்கும், பாவலர்கட்கு மிருந்த நட்பின் பெருமை விளங்குகின்றது. இப் பாண்டி நாட்டுப் புலவர் பாண்டியவரசனுலும் சோழமன்னனுலும் நன்கு மதிக்கப் பெற்றவரென்று புலப்படுகின்றது.

அறிவிற் சிறந்த நம்பி அரசனுக்குப் பிசிராந்தையார் இறைமையைப் பற்றி அறிவுறுத்திய செய்யுள் இதுவாகும். இதனை நச்சினார்க்கினியர் வாயுறை வாழ்த்து என்றும், செவியறிவுறூஉ அன்றென்றும் கூறியுளர். வாயுறைவாழ்த்து இடித்துரையாகும். அவ்வுரை முன்னர்த் தாங்கக் கூடாவாயினும் பின்னர்ப் பெரிதும் பயன் பயக்கும். 'செவியறிவுறூஉ' என்பது உபதேசம். அது அவையடக்கியற் பொருளுறக் கூறும்: அரசனுக்கும் யானைக்கும் உவமைகூறி யானைப்பாகன் கொடுக்கும் கவளத்தை யுண்ணின்

கேடில்லையென்றும், தானே வயலிற் புகுந்து பயிரை அழித்துத் தானுண்ணுமுணவு சிறிதென்றும் இறைமை முறைமையைப் புலவர் விளக்கியுள்ளார். (தொல்காப்பியம், பொருளதிகாரம், செய்யுளியலில் இவ்விரண்டிற்கு முள்ள வேற்றுமையை விளக்குஞ் சூத்திரங்கள் இவண் வருவன.

'வாயுறை வாழ்த்தே வயங்க நாடின்
வேம்பும் கடுவும் போல வெஞ்சொல்
தாங்குதல் இன்றி வழிநனிபயக்கு மென்று
ஓம்படைக் கிளவியின் வாயுறுத் தற்றே.'

'செவியுறைதானே (வல்லா கூறினும்)
பொங்குதல் இன்றிப் புரையோர் நாப்பண்
நவிலுதல் (அவிதல்?) கடனெனச் செவியுறுத் தன்றே')

' காய்நெல் அறுத்துக் கவளம் கொளினே
மாநிறை வில்லதும் பன்னாட்கு ஆகும்;
நூறுசெறு வாயினும் தமித்துப்புக் குணினே
வாய்புகு அதனினும் கால்பெரிது கெடுக்கும்;
அறிவுடை வேந்தன் நெறியறிந்து கொளினே
கோடி யாத்து நாடுபெரிது நந்தும்;
மெல்லியன் கிழவ னாகி வைகலும்
வரிசை அறியாக் கல்லென் சுற்றமொடு
பரிவுதப எடுக்கும் பிண்டம் நச்சின்
யானை புக்க புலம்போலத்
தானும் உண்ணான், உலகமும் கெடுமே.'

கவளம்—வாயளவுகொண்ட உணவுத்திரள், மா - ஒருமா. நிலவளவில் இருபதிலொருபங்கைக் குறிக்கும் எண்ணுப் பெயர். மிகச் சிறிய வயல். நிறைவில்லது - ஒருமாவிற்கும் குறைந்தது. அச்சிறிய வயலில் விளையும் நெல்லும் ஒரு யானைக்குப் பலநாள் கவளத்திற்கு உதவும். செறு - வயல், நன்செய். தமித்து - (யானை) தனியே; புக்கு - (நூறு வயல்களிலுந் தனியே) புகுந்து. உணினே - உண்ணுமாயின். வாய் - யானையின் வாயில். கால் - (யானையின்) காலில் மிதியுண்டு. யானை தின்பது சிறிது,

அதன் காலால் அழிபடுவது மிகுதி. நெறி - அரசுமுறை, தரும வழி. கோடி - மிகுந்த பொருள். யாத்து - ஈட்டிக்கொடுத்து நந்தும் - தழைக்கும். கிழவன் - அரசன், உரிமையுடையவன். மெல்லியன் - அறிவில் குறைந்தவன். மெல்லியல் கிழவன் - பெண் வழிச் சேர்ந்தவன். வைகலும் - நாள்தோறும். வரிசை - தரம்; ஒழுங்கு, முறைமை. கல் - ஒலி, ஆரவாரம். பரிவு - அன்பு. தப - கெட. எடுக்கும் - கொள்ளும். பிண்டம் - பொருள் தொகுதி, குவியல். நச்சின் - விரும்பினால், புலம் - நிலம், வயல். வேந்தன் புத்திகெட்டு அரசுமுறையினின்றும் வழுவிப் பெண்களின் மீது கொண்ட ஆசையினால் அன்னார் உற்றார் உறவினரின் டம்பச் சொற்களைச் செவிமடுத்துக் குடிகட்கு வருந் துன்பத்தைக் கவனியாமல் பெரும் பொருளைப் பறிப்பானாயின் அவன் நாடு பாழ்படும். எதுபோலெனில் யானை புகுந்து அழித்த வயல்போலும். பறித்த பொருள் அரசன் பண்டார சாலைக்கு வாராமல் டம்பாசாரிகளாகிய சுற்றத்தாரால் கொண்டுபோகப்படும். அதனால் நாடும் கெடும்; கெட்டழிந்து போகும்.

இவ்வாறு புலவர் கூற நிமித்தமென்னை என்பதே ஆராயற்பாலது. அரசனோ அறிவிற் சிறந்தவன். அவனுக்கு இவ்விதம் புத்திமதி கூறக் காரணமிராது. அவன் மெல்லியலாரிடம் உரிமைப்பட்டவனாயிருந்து மதிகெட்டு அன்னார் சுற்றத்தாரின் விருப்பப்படி குடிகளை வருத்திப் பேரிறைகொண்டு அப்பெரும் பொருளைப் பெண்வழிச் சுற்றத்திற்கு அளித்து வருவதைக் கண்டே புலவர் இச்செய்யுளால் அறிவுறுத்தினாரென்று நினைக்க விடமுளது. செந்நாப்போதாரும் 'மனைவிழைவார் மாண்பயன் எய்தார்' என்றும், 'எண்சேர்ந்த நெஞ்சத்து இடன் (இடம்) உடையார்க்கு எஞ்ஞான்றும் பெண் சேர்ந்தாம் பேதைமை இல்' என்றும் கூறியுளார். நெஞ்சத்திடம் - மனவுறுதி, நெஞ்சத்து இடம் - விரிந்த, விசாலமான மனது.

அறிவுடை நம்பியாகிய பாண்டியவரசன் புதல்வனில்லாத இல் வாழ்வாற் பயனில்லை என்று பாடியிருப்பதால் ஆண்மகனில்லாதவனாய் மனைவி, பெண்டிர்வழி நடந்தவனாகக் கருதி ஐயுற இடமுள

தெனலாம். 'தம் பொருளென்ப தம் மக்கள்' என்றவாறு அரசனுக்கு எத்துணைப் பொருளிருப்பினும் மகக் குறைவு பற்றி மனம் வருந்தி மகனைப்பத மகளிர் வழியுற்றான் போலும் பாண்டிய வரசன். இவண் வருவது அப்பாண்டியன் பாட்டாகும்.

'படைப்புப் பலபடைத்துப் பலரோடு உண்ணும்
உடைப்பெருஞ் செல்வர் ஆயினும் இடைப்படக்
குறுகுறு நடந்து, சிறுகை நீட்டி,
இட்டும், தொட்டும், கவ்வியும், துழந்தும்,
நெய்யுடை அடிசில் மெய்பட விதிர்த்து
மயக்குஉறு மக்களை இல்லோர்க்குப்
பயக்குறை இல்லைத் தாம்வாழும் நாளே.'

படைத்து - பெற்று, உண்கலத்திட்டு. படைப்பு - சோறு வகை, அருளப்பெற்ற செல்வம், பலவகை அன்னம் உண்கலத்தி லிடப்பட்டன. பலர் - பல விருந்தினர். உடை - உடைமை. பெரும் - பெரிய, மிகுந்த. இடைப்பட - காலம் இடையே யுண்டாக, மிடைப்பட - நெருங்கிவந்து, குறுகுறு — குறுகக்குறுக, சிறுநடை. இட்டும் - தரையிலே உணவை எறிந்தும். தொட்டும்- தோண்டியும், அளைந்தும். துழந்தும் - கலந்தும், சிதறியும். அடிசில் - சோறு. மெய்பட - உடல்மீது. விதிர்த்தும் - சிதறியும். மயக்குறும் - இன்பத்தால் அறிவுமயங்குமாறு செய்யும், மயக்கு- மயக்குகின்ற. பயக்குறை - பயன் (வாழ்கைப் பயன்) குறைவே யாம். இல்லை...நாளே - வாழினும் வாழ்வில்லை. பிள்ளையில்லா தவருடைய வாழுளனைத்தும் வீணாளேயாம். நாயனாரும் மகப்பேற்றின்பத்தைச் சிறக்க வரைந்துளர். அவரும் மகப்பேறுற்றவராகத் தெரியவில்லை. கண்ணில்லாதவருக்குக் கண்விழைவு மிகுதி. மக்கட்பேற்றினும் பெரும்பேறில்லை. 'பெறுமவற்றுள் யாம் அறிவதில்லை....மக்கட் பேறல்ல பிற' என்றும், மக்களைப்பெறின் 'எழுபிறப்புந் தீயவை தீண்டா' என்றும், 'அமிழ்தினும் ஆற்ற இனிதே தம்மக்கள் சிறுகை அளாவிய கூழ்' என்றும், 'மக்கள் மெய் தீண்டல் உடற்கு இன்பம், மற்றவர் சொற்கேட்டல் இன்பம் செவிக்கு' என்றும், 'குழலினிது யாழ் இனிது என்ப(ர்) தம் மக்கள் மழலைச்சொற் கேளாதவர்' என்றும் கூறியிருப்பது கவ

னிக்கத்தக்கது. பாண்டியன் அறிவுடை நம்பி திருக்குறள் பயின்ற புலவரென்பது இப் புறப்பாட்டால் விளங்கும். பலநூல்களையும் கற்றுத்தெளிந்தவராதலின் அறிவுடை நம்பி என்றபெயர் அவருக்குப் பொருத்தமேயாகும்.

பொதுவியற் றிணை

[இளவழகனார்]

நல்வழிக் கொடுத்த நாண்உடை மறவர்
செல்லா நல்இசைப் பெயரொடு நட்ட
கல்ஏசு கவலை எண்ணுமிகப் பலவே
இன்புஉறு முரற்கைநும் பாட்டுவிருப் பாகத்
தொன்றுஒழுகு மரபின்நும் மருப்புஇகுத்துத் துனைமின்.

(மலைபடுகடாம், ௩௮௭-௩௯௧.)

‘ முதுகு புறந்தராத நல்லவழியில் தம் உயிரைக் கொடுத்த நாண் மிக்க வீரரின் கெடாத இனிய புகழினையுடைய பெயர்களோடு அவருருவங்களையும் எழுதி நட்ட நடுகற்கள் முதுகிட்டுப் போயினாரை இகழுகின்ற நெறிகள், எண்ணுதல் மிகும்படி பலவாயிருக்கும் ; இன்பம் மிக்க தாளத்தினையுடைய நும் பாட்டுகள் அந் நடுகற் றெய்வங்கட்கு விருப்பமாகும்படி பழமை தொட்டு இயன்றுவராநின்ற முறைமையினையுடைய நும் யாழினை இசைத்துக்கொண்டு விரையச் செல்விராக !’

இது கூத்தர் தலைவனை அச் சுற்றத்தோடு விளித்துக் கூறப்பட்டதாகும். இதன் முதலிரண்டடிகள்,

“நல்லமர்க் கடந்த நாணுடை மறவர்
பெயரும் பீடு மெழுதி யதர்தொறும்
பீலி சூட்டிய பிறங்குநிலை நடுகல் ” *

---

* அகநானூறு, ௬௭.

என்னும் அகநானூற்றடிகளோடு பெரிதும் ஒத்து நிற்றல் நினை விருத்தற்பாலது. ஏசுமென்னும் வினைக்குக் கல் வினைமுதல். எண்ணு, முதனிலைத் தொழிற்பெயர் ; இதன் உகரம் சாரியை ; 'கவலை பல'வென்க ; கவலை, கிளைகிளையாய்ப் பிரிந்து செல்லும் வழி ; இகுத்தல், இசைத்தல் ; இஃதிப்பொருட்டாதலை "மழை யெதிர் படுகண் முழவுக ணிகுப்ப"† வென மேல்வரும் இம் மலை படுகடாத்துத் தொடரினும் உணர்க.

'பொதுவியற்றிணை' யென்பது வெட்சிமுதற் பாடாண்டிணை யீறுகக் கூறப்பட்ட புறத்திணைகளெல்லாவற்றிற்கும் பொதுவாய் இயலும் ஒழுக்கங்களாம் ; புறப்பொருள்வெண்பாமாலை யாசிரி யர் இப் பொதுவிய லொழுக்கங்கட்குப் 'பொதுவியற் படல'மென ஒன்று தமது நூலுள் வகுத்திருக்கின்றார். அதன்கண் 'பொது வியற்பால' 'சிறப்பிற் பொதுவியற்பால' 'காஞ்சிப் பொதுவி யற்பால' 'முல்லைப் பொதுவியற்பால' என்று நான்கு பிரிவு கள் காணப்படுகின்றன. இவற்றுட் பொதுவியற்பால வென்பதின் கண், முடியுடை யரசர்கண் மூவருந் தத்தமக்கு அடையாளமாக அணிந்துகொள்ளப்படும் போந்தை முதலான பூக்களை புகழ்த லும், மறவர்கள் தம் வேந்தனை உன்னமென்னும் ஒருவகை மரத் தோடு இயைத்துப் புகழ்தலும், அரசன் இளையனாயினும் அவ னுக்கு அமைந்துள்ள அரசியற்றிறமையை உயர்த்துக் கூறுத லும், கழல்புனைதலைப் புகழ்தலும், போர்க்களத்தில் முதுகு புறந் தராது பொருது ஆண்மையுடன் உயிரைக்கொடுத்த போர்வீரர் களின் உருவமும் பெயரும் பீடும் எழுதுதற்கு ஏற்றதொரு கல் லைக் காண்டலும், அதைக் கொள்ளுதலும், நீர்ப்படுத்தலும், நடுத லும், அதனைத் தெய்வமாயெண்ணி வாழ்த்தலும், கோயிலெடுத் தலுமென இச்செய்திகள் கூறப்படுகின்றன ; 'போந்தை' யென் பது பனந்தோடு ; வேம்பென்பது வேப்பன் ; ஆர் என்பது ஆத்தி ; இம்மூன்றும் முறையே சேர பாண்டிய சோழர் மூவர்க் கும் உரிய அடையாளப் பூக்களாகும் ; இவ்வுண்மையை,

---

† மலைபடுகடாம், ௩௪௨.

"தோடார் போந்தை வேலோன்" *
"சினையலர் வேம்பன்" †
"ஆர்புனை சென்னி யரசன்" ‡

என்னுஞ் சிலப்பதிகாரத் தொடர்களானுங் கண்டுகொள்க. இவ் வேந்தர்கள் போர் செய்யுங் காலங்களில் இவ்வடையாளப் பூக்களோடு வெட்சி முதலான புறத்திணைப் பூக்களையும் உடனணிந்து கொள்வரென்பது அறியற்பாலது. உன்னமென்னும் மரம் தனது நாட்டுக்குக் கேடு வரும்போது உலறுமெனவும், அங்ஙனம் வாராத போது தளிர்க்குமெனவுங் கூறுப; தொல்காப்பியப் புறத்திணையியலில், 'உன்னமென்பது ஓர் மரம். அது தன் நாட்டகத்துக் கேடு வருங்கால் உலறியும், வாராத காலம் குழைந்தும் நிற்கும்'|| என்று ஆசிரியர் இளம்பூரணர் இங்ஙனமே எடுத்துரைத்தலும் நினைவுகூர்க. பதிற்றுப்பத்துரையிலும் ஈது உரைக்கப்படுகின்றது. ‡‡ வேந்தன் வெற்றிபெற்ற ஞான்று அவனியல்பினை மறவர் அவ் வுன்னமரத்தி னியல்போடு இயைத்துப் புகழ்வரென்க. இதனை ஐயனரிதனர்,

"துன்னருந் தானைத் தொடுகழலான் றுப்பெதிர்ந்து
முன்னர் வணங்கார் முரண்முருங்க - மன்னரு
மீடெலாந் தாங்கி யிகலவிந்தார் நீயுநின்
கோடெலா முன்னங் குழை" o

என்று தமது வெண்பாமாலையிற் கூறினர். இத்துறை 'உன்ன நிலை'யெனப்படும்; அரசன் ஆண்டில் இளைஞனயினும் அரசாட்சித்திறமையிற் பெரியனென்று உயர்த்துக் கூறுதல் 'ஏழகநிலை' யெனப்படுகின்றது; ஏழகமென்பது ஆட்டுக்கிடாய்; அரசன் வெளியிடங்களி லெல்லாம் யானையின்மேலுங் குதிரையின் மேலும் ஏறிப் புறத்தார்க்குப் பெருந்தன்மை காட்டுவனயினும், அரண்மனையி னுட்புறத்திலும் வேறு மறைவான இடங்களிலும் விளையாட்டுக்காகக் குதிரையைப்போன்ற பெரிய ஏழகத்

* சிலப், நீர்ப்படை, கஎ௫. || தொல், புறத், ௫.
† ,, கொலைக்களக், கஉக௬. ‡‡ பதிற்றுப், உ௰.
‡ ,, நடுகல், உகக. o புறப்-வெண், பொதுவியல், உ.

தின்மேலும் ஏறி யூர்தலுஞ் செய்வானெனென்ப. ஏழகத்தின்மே லூருமிம் மரபு,

"வரையக மேற வலிமின மென்று
விசைசெலல் வெம்பரி மேழக மேற்றிக்
குரைகழன் மைந்தனைக் கொண்டு பறந்தான்"*

என்று சீவகசிந்தாமணியின் காந்தருவதத்தையாரிலம்பகத்தினுங் கூறப்படுகின்றது. எனினும் இவ்'வேழகநிலை'யென்பது அரசனது இளம்பருவத்தை விளக்கிக் காட்டுவதொரு துறையென்றே முதன்மையாய்க் கருதப்படல்வேண்டு மென்க. "ஏந்துபுக ழுலகி னிளமை நோக்கான் வேந்து நிற்றலு மேழக நிலையே"† யென்று வெண்பாமாலையாசிரியரும் இது கருதியே வேறுமொரு கொளு வுரைத்தலுங் காண்க. பண்டைக்காலத்திற் போர்க்களத்திற் பொருது உயிர் துறந்த புகழ்மிக்க வீரர்கட்கு ஆங்காங்கும் அவர் உருவும் பெயரும் எழுதி நடுகல் நடுதலும் வாழ்த்தலும் வழக்கமாயிருந்தன.

"ஆடவர்
பெயரும் பீடு மெழுதி யதர்தொறும்
பீலி சூட்டிய பிறங்குநிலை நடுகல்"‡

என்னும் அகப்பாட்டினும் இவ்வியல்பு எடுத்துரைக்கப்படுதல் காண்க. கன்னட நாட்டார் இதனை வீரக்கல்லென்றே வழங்குப. இவ் வீரக்கற்களுக்குக் கோயிலெடுத்தலும் உண்டென்பது வெண்பாமாலையில் இதற்கு வகுக்கப்படும் 'இற்கொண்டு புகுதல்' என்னுந் துறையினால் அறியப்படும். இவ்வளவே புறப்பொருள் வெண்பாமாலையிற் பொதுவியற்பாலவாய் எடுத்துக்காட்டப்பட்ட செய்திகளாமென்க.

இச்செய்திகள் வெட்சிமுதற் பாடாணீறாகக் கூறப்படும் புறத்திணைகட்குப் பொதுமையுடையனவேயாம்; எனவே இவை வெட்சித்திணைக்கும் உரியனவாமாகலின், ஆசிரியர் தொல்காப்பிய

---

* சிந்தா, காந்தரு, ௨௬.   † புறப்-வெண், பொதுவியல், ௬.
‡ அகநா, ௧௩௧.

ஞர் இவற்றை அம் முதற்றிணைக்குத் துறையுரைக்கும் 'வெறியறி சிறப்பின் வெவ்வாய் வேலன்' என்னு நூற்பாவிலேயே தொகுத்துக் கூறுவாராயினர்.

" உறுபகை
வேந்திடை தெரிதல் வேண்டி யேந்துபுகழ்ப்
போந்தை வேம்பே யாரென வரூஉ
மாபெருந் தானையர் மலைந்த பூவும்"

" ஓடா
உடல்வேந் தடுக்கிய வுன்ன நிலையும்"
" ஓடாக் கழனிலை"
" காட்சி கால்கோள் நீர்ப்படை நடுகல்
சீர்த்தகு சிறப்பிற் பெரும்படை வாழ்த்தலென்
றிருமூன் று வகையிற் கல்லொடு புணர"

என்று வரும் அந்நூற்பாவின் பகுதிகளில் வெண்பாமாலையாசிரியர் ஈண்டுப் பொதுவியற்பாலவென வகுத்துக்கூறிய போந்தை வேம்பு ஆர் என்னுஞ் சேர பாண்டிய சோழரின் அடையாளப்பூக்களும், உன்ன நிலையும், கழனிலையும், கற்காண்டல் கற்கோணிலை கன்னீர்ப்படுத்தல் கன்னடுதல் கன்முறை பழிச்சல் இற்கொண்டு புகுதலென்னும் நடுகற்செய்திகளும் முறையே கூறப்படுதல் கண்டு கொள்க. இனி இவற்றுள் நடுகற்செய்திகளைப்பற்றிக் கூறும் பகுதியில் தொல்காப்பியனார் 'சீர்த்தகு சிறப்பிற் பெரும்படை' யென்றது, 'நாட்டிய கல்லிற்குக் கோட்டஞ்செய்த'லாமெனவும், வெண்பாமாலையாசிரியர் உரைத்த 'இற்கொண்டுபுகுத'லென்னுந் துறை இதுவேயாமெனவும் ஆசிரியர் இளம்பூரணருரைத்தமை அறியற்பாலது. இன்னும் இப் பகுதியிற் 'கால் கோ'ளென்று கூறப்படுவது, ஆராய்ந்து கண்ட கல்லை வாளா கைக்கொள்ளுதலாமெனச் சிலரும், அற்றன்று ஆராய்ந்து கண்ட கல்லில் உருவெழுதத் தொடங்குதலாமென வேறு சிலருங் கருத்தெண்ணுகின்றார். தொல்காப்பியனார் வாளா 'கால்கோ'ளென்ற தொடர்க்கு இளம்பூரணர் 'கற்கொள்ளுத'லென் றுரைத்தார். கால்கோ ளென்பதை அவர் உரைப்படுத்தும்போது கல்கோளெனக்கொண்டு, 'அவ்வாறு காணப்பட்ட கல்லைக் கைக்கோடல் என்றவாறு' என்று அதற்கு

உரையுமியம்பியதனால் அவ்வுரையாசிரியர் கருத்துத் தெளிவாய்ப் புலப்படாநின்றது. **நச்சினார்க்கினியர்** அதனை உருவெழுதற்கு அடிப்படைகோலுதலென உரைவகுத்தார். **புறப்பொருள் வெண் பாமாலையாசிரியர்** முன் கருத்தையே தழுவி 'விண்மேயாற்குக் கற்கொண்டன்று' என்பர். இனி இக் கால்கோட்செய்தி சிலப் பதிகாரக் கதையிற் றொடர்பு படுதலும் இங்கு நினைவுகூரற்பாலது. அக் காதையின் உரையாசிரியன்மார் இருவருள்ளும் அடியார்க்கு நல்லார் முற்கருத்தினையும் அரும்பத உரையாசிரியர் பிற்கருத்தி னையும் புலப்படுத்தி உரைகாட்டினர். **அடியார்க்கு நல்லார்** சிலப் பதிகாரப் பதிகத்தில் வருங்'கால்கோள்' என்பதற்குக் 'கற்கொண் டகாதையும், கற்கோள் கால்கோளென விகாரம்' * என்று உரை கூறுதலும், **அரும்பத உரையாசிரியர்** 'கால்கொள்கையாவது, கட வுள் வடிவெழுதத்தொடங்குதல்' † என்றுரைத்தலும் உற்று நோக்குக. இனி இவ்வாறு பலரும் பலவாறுரைத்தனரேனும் கற்கொள்ளுங் காலத்திற் செய்யுஞ் சிறப்பினுங் கால்கொள்ளுங் காலத்துச் செய்தல் மேம்பட்டுத் தோன்றுதாகலின், ஈண்டுக் 'கால்கோள்' என வந்த தொடர்க்குக் கற்கொள்ளலென்னும் பொருளே பெரிதும் பொருந்துமென் றறிதல்வேண்டும். புறப் பொருள் வெண்பாமாலை யாசிரியர் இவ்வாறெல்லாம் பொதுவியற் பாலவென வகுத்துக் கூறிய துறைகளையெல்லாம் ஆசிரியர் தொல்காப்பியனார் 'வெறியறி சிறப்பின்' என்னும் வெட்சித் திணைப் புறனடை நூற்பாவிலேயே விளக்கிக் காட்டினமை கண்டு கொள்க; மற்றிதன்கண் ஆசிரியர் கூறாது ஐயனாரிதனார் 'ஏழக நிலை'யென அத்துணைச் சிறிவாததொன்று புதுவதாய்க் கூறினா ரெனக.

இனிப் புறப்பொருள் வெண்பாமாலை யாசிரியர் 'சிறப் பிற் பொதுவியற்பால'வெனவும் 'காஞ்சிப் பொதுவியற்பால'வென வும் பொதுவியற்றிணைக் குரியவாக வகுத்துரைக்குந் துறைகள் அத்தனையும் ஆசிரியர் தொல்காப்பியனார் தமது காஞ்சித்திணைப் பகுதிக்கண் வகுத்து நிறுத்திய துறைகளேயாகும். வெண்பா மாலையிற் சிறப்பிற் பொதுவியற்பாலவாய் வந்த துறைகள், முது

* சிலப், பதிகம், ௮௪.　　† சிலப், கால்கோட், ௨௫௪.

பாலை, சுரநடை, தபுதாரநிலை, தாபதநிலை, தலைப்பெயனிலை, பூசன் மயக்கு, மாலைநிலை, மூதானந்தம், ஆனந்தம், ஆனந்தப்பையுள், கையறுநிலை யென்பனவாம்; தொல்காப்பியனார் காஞ்சித்திணையில் வகுத்த 'தனிமகள் புலம்பிய முதுபாலை' * யென்னும் முதுபாலைத் துறையினை ஐயனாரிதனார் தனிமகள் புலம்பிய முதுபாலையெனவுந் தனிமகன் புலம்பிய முதுபாலையெனவும் இருவகைப்படுத்து முன்னதை ஆசிரியர் கூறியவாறே 'முதுபாலை'யென நிறீஇப் பின்னதைச் 'சுரநடை' யென்று நிறுத்திட்டார். மேற் 'காதலியிழந்த தபுதாரநிலை' 'காதலனிழந்த தாபத நிலை' 'தாய்தப வரூஉந் தலைப்பெயனிலை' 'மாய்ந்த பூசன் மயக்கம்' 'கணவனொடு முடிந்த படர்ச்சி நோக்கிச் செல்வோர் செப்பிய மூதானந்தம்' 'கழிந்தோர் தேஎத் தழிபட ருறீஇ யொழிந்தோர் புலம்பிய கையறு நிலை' யென்னுந் தொல்காப்பியக் காஞ்சித்திணைத் துறைகளை வெண்பாமாலையார் பொதுவியற்றிணையில் தபுதாரநிலை முதலியனவாக அப்படியே எடுத்துரைத்தார். ஆசிரியர் ஆண்டு 'நல்லோள் கணவனொடு நனியழற் புகீஇச் சொல்லிடை யிட்ட பாலைநிலை'யெனக் கூறிய பாலைநிலையினை ஈண்டு இவர் 'மாலைநிலை' யென்றார். தொல்காப்பியப் புறத்திணையியலுக்கு ஆசிரியர் இளம் பூரணர் எழுதிய உரைப்படியிற் 'பாலைநிலை'யென்னும் இத்தொடர் 'மாலைநிலை'யெனவே பாட வேறுபாடாக உள்ளமையும் இங்கு நினைவுகூர்க. இதனைக் 'காஞ்சித்திணைக்' கட்டுரைக்கண்ணும் எடுத்துரைத்தாம். இனி ஆசிரியர் 'பேஎத்த மனைவி யாஞ்சி' யெனக் காஞ்சித்திணையினுரைத்த ஆஞ்சிக்காஞ்சியை மீய 'ஆனந்த' மெனவும், 'தாமே யேங்கிய 'தாங்கரும்பையு'ளென்பதனையே 'ஆனந்தப் பையு'ளெனவும் ஐயனாரிதனார் சிறிது சிறிது திரித்துரைத்தார். இவற்றை அவ்வவற்றின் பொருளொற்றுமைகளானுங் கண்டுகொள்க. புறப்பொருள் வெண்பாமாலையின் காஞ்சிப்படலத்தில் வரும் 'ஆஞ்சிக்காஞ்சி' ‡ யென்னுந் துறை ஆசிரியருரைத்த ஆஞ்சிக் காஞ்சியினும் பொருளளவில் வேறுபட்டுத் தோன்றலின் அவ்விரண்டும் ஒன்றாகாது வேறுவேறாமென் றுணர்ந்துகொள்ளப்படும்.

---

* தொல், புறத், ௧௯. ‡ புறப் - வெண், காஞ்சி, ௨௨.

மற்று இவ் வெண்பாமாலை யாசிரியர் 'காஞ்சிப் பொதுவியற் பால' வென் றுரைக்குந் துறைச் செய்திகளும் ஆசிரியர் காஞ்சித் திணைக் குரைத்தவைகளேயாம். 'கழிந்தோர் ஒழிந்தோர்க்குக் காட்டிய **முதுமையு**' மென்று ஆசிரியர் உரைத்த முதுகாஞ்சியினை வெண்பா மாலையார் சான்றோர் அறம் பொருளின்பங்களைப் பிறர்க்குக் கூறும் 'முதுமொழிக் காஞ்சி' யெனவும், வாளா அறிவுரை கூறும் 'பொருண்மொழிக் காஞ்சி' யெனவும், வீட்டியனுரைக்கும் 'புலவரேத்தும் புத்தேணுடு' எனவும், நிலையாமை மொழியும் 'முதுகாஞ்சி' யெனவும் நான்கு துறைகளாகப் பிரித்துரைத்தார். ஆசிரியர் 'மாற்றருங் கூற்றஞ் சாற்றிய **பெருமை**'யெனக் கொண்ட பெருங்காஞ்சியினையும், 'மலர்தலை யுலகத்து மரபுநன் கறியப் பலர் செலச்செல்லாக் **காடுவாழ்த்து**' என வகுத்த காடுவாழ்த்தினையும் ஐயனாரிதனார் அப்படியே பெருங்காஞ்சி யெனவுங் காடுவாழ்த் தெனவுங் கூறிக்கொண்டார். இவ்வளவே இவர் காஞ்சிப் பொது வியற்பாலவெனக் கூறிய செய்திகளென்க.

இவ்வாற்றால், ஆசிரியர் தொல்காப்பியனார் காஞ்சித்திணைக் குரைத்த துறைகளையே எடுத்து வெண்பாமாலை யாசிரியர் தமது நூலுள் 'சிறப்பிற் பொதுவியற்பால' வெனவுங் 'காஞ்சிப் பொது வியற்பால' வெனவும் பொதுவியற் றிணைக் குரியவாக அடக்கி உரைகிளத்தினரென்பது நன்கு விளங்கும்; ஆசிரியர் நிலையாமைப் பொருட்டாய்க் காட்டிய காஞ்சி யொழுக்கத்தை இவர் படை யெடுத்து வரும் மாற்று வேந்தனுக்கு எதிர்சென் றான்றும் ஒழுக்கமாகக் கருத்து மாற்றி யுரைத்துக்கொண்டமையின், அவ் வாசிரியர் பெருமானு ரெடுத்துக்காட்டிய நிலையாமை யொழுக்கக் கருத்துக்களைப் 'பொதுவிய'லென வொன்று வகுத்து அதன்கண் அடக்குங் கட்டாயத்துக்கு வந்து இவ்வாறெல்லாம் இவர் இடர்ப் படுவாராயினரென்க. ஆசிரியருரைத்தகாஞ்சித்திணைத் துறைகளில் 'மன்னைக்காஞ்சி' முதலான சிலவற்றை ஐயனாரிதனார் தாங் கருத்து மாற்றியுரைத்துக்கொண்ட 'காஞ்சிப்படலத்'திலும் இயை பின்றிப் புகுத்தினார். எனவே ஈண்டிவர் 'சிறப்பிற் பொதுவியற் பால' வெனவும், 'காஞ்சிப் பொதுவியற்பால' வெனவும் உரைக்

குந் துறைக்கூறுகள் ஆசிரியர் தொல்காப்பியனார் வகுத்த 'காஞ்சித் திணைப்பாலவாய் உரைக்கற்பாலவே யில்லாமல், இவர் கூறுமாப் போல் இவற்றைப் 'பொதுவியற்பால'வாய் உரைக்கற்பாலன வல்லவென் றுணர்ந்துகொள்க.

இங்ஙனமே இவ் வெண்பாமாலையார் 'முல்லைப் பொதுவியற் பால'வென் றுரைக்குங் கருத்துக்களும் உண்மையிற் புறப்பொரு ளொழுக்கங்கட்குப் பொதுமையுடையன வல்லவென்க. இவை யனைத்தும் ஆசிரியர் தொல்காப்பியனாருரைக்கும் வாகையொழுக் கத்தின்கண் அடக்கற் பாலனவாம். தொல்காப்பியனார் வாகை யென்றுரைத்த ஒழுக்கத்தை இவர் 'வாகை'யெனவும் 'முல்லை' யெனவும் இருவகைப்படுத்து உரைத்தமையை மேல் **வாகைத் திணைக் கட்டுரை**யிலேயே விளக்கியிருக்கின்றேம்; எனவே ஆசிரி யர் தொல்காப்பியனாரது வாகை யொழுக்கத்திலேயே அடங்கி யமையற்பாலதான முல்லையெனப்படும் இவ் வொழுக்கத்திற்கு வெண்பா மாலையார் தமது வாகைப்படலத்தில் வகுத்துக்கூறிய துறைகள் நீங்கலாக ஏனைய சிலவற்றை இப் பொதுவியற்படலத் திலும் முல்லைப் பொதுவியற்பாலவென வகுத்துரையா நின்றன ரென் றறிந்துகொள்க வென்பது; அங்ஙனம் வகுத்துரைக்குங்கால் அகப்பொருண் முல்லையும் அவற்றின்கண் இடையிடையே விராஅய் வந்தது; பெரும்பான்மையும் இம்'முல்லைப் பொது வியற்பால' வென்பதன்கண் வகுக்கப்படுந் துறைகள், தலைவன் வினைமேற்சென்று மீளுங் காலத்தில் இல்லிலிருந்து ஆற்றிக்கொண் டிருக்கும் அவன்றன் றலைவியி னியல்பு மிகுதிகளையே எடுத் துரைப்பனவாயிருக்கின்றன.

"தடவரை மார்பன் றன்னமர் காதன்
மடவரற் புணர்ந்த மகிழ்ச்சிநிலை யுரைத்தன்று."*

என்று **ஐயனாரிதனார்** அம்'முல்லை' யென்பதற்குக் கொளு வுரைத்து விளக்கங் கூறுதலினின்றும் இவ்வுண்மை நன்கு பெறப் படுதல் காண்க. மேகத்தினியல்பு மிகுதியைக் கூறுங் 'கார்முல்லை' யும், தலைவி தன் தலைவனது தேர்வரவை யுரைக்குந் 'தேர் முல்லை'

* புறப் - வெண், பொதுவியல், முல்லைப்பொது, க

யும், தலைவிக்கு இயல்பாயெழூஉம் நாண மிகுதியை விளக்கும் 'நாண் முல்லை'யும், அவள் இல்வாழ்க்கை மிகுதியை யுணர்த்தும் 'இல்லாண் முல்லை'யும் அவ் வாழ்க்கையை யாற்றுந் தலைவனை ஏர்ப்பகட்டுடன் உவமித்துப் புகழும் 'பகட்டுமுல்லை'யும், தலைவியின் சிறப்பினை விளம்பும் 'பான் முல்லை'யும், அவட்குள்ள இயல்பானகற்பு மிகுதியை மொழியுங் 'கற்புமுல்லை'யுமென அவர் வகுத்துக்காட்டுந் துறைகளும் மேலுண்மையை நன்கு வலியுறுத்துவனவாயும் நிற்றல் அறியற்பாலது; ஆகவே ஆசிரியர் ஐயனாரிதனார் தமது வெண்பாமாலையில் 'முல்லைப் பொதுவியற்பால'வென உரைக்குந் துறைச் செய்திகளும் உண்மையிற் புறப்பொருளொழுக்கங்கட்குப் பொதுமையுடையன வல்லவாய் ஆசிரியர் தொல்காப்பியனார் வகுத்துக் காட்டிய வாகையொழுக்கத்தின் கண் சிறப்பாய் அடங்கியமைதல் நன்கறியப்படுகின்றதென்க.

இனி இவ் வெண்பாமாலையாசிரியர் இவ்வாறெல்லாம் வகுத்துக்காட்டுதற்குரிய பொருட்சிறப்புகள் ஏதுமில்லாமல் வறிதே 'பொதுவியற் படல'மென ஒன்று ஈண்டு வகுத்தமை போலவே மேலும் 'ஒழி' பெனவும் வேறொன்று பகுத்து, மற்றதன்கண்ணும் ஆசிரியர் குறித்துக் காட்டிய வாகைத்திணையின் பிரிவொன்றனையே விளக்கிக் காட்டினாரென்க. ஆசிரியர் தொல்காப்பியனார் வாகைத்திணையியல்புகளைத் தொகுத்துக்கூறிய 'அறுவகைப்பட்ட பார்ப்பனப் பக்கமு'*மென்னு நூற்பாவினிறுதியில், அடங்காதனவற்றிற்கெல்லாம் 'அனைநிலை வகை' யென்று உரைத்து அவ்வாகைக்கு ஒரு பிரிவு கொள்வாராயினர். அதற்கு ஆசிரியர் இளம்பூரணர் "சொல்லான் வேறலும், பாட்டான் வேறலும், கூத்தான் வேறலும், சூதான் வேறலும், தகர்ப்போர் பூழ்ப்போர் என்பனவற்றால் வேறலும், பிறவும் அன்ன"வென்று உரை காட்டினார். ஆனால் ஆசிரியர் நச்சினார்க்கினியர் இவையனைத்தையும் பொருநர்க்குரிய மரபுகளாகவே உரைத்து, இங்ஙனமே ஏனையோர்க்கும் ஆசிரியர் உரைத்தவை நீங்கலாக இவ்'வனைநிலை வகை'ப்பட்டுப் பிறவும் வருஉமென்று உரை கூறினர். இவையெல்லாம் 'வாகைத்

---

* தொல், புறத். ௨௰.

திணைக்'கட்டுரையிலும் விளக்கப்பட்டிருக்கின்றன. இவ்வாறெல்லாம் வரும் ஆசிரியர் தொல்காப்பியனாரது வாகைத் திணையின் பிரிவொன்றனையே வெண்பாமாலை யாசிரியர் "வாணிக வென்றி, உழவன்வென்றி, ஏறுகொள்வென்றி, கோழிவென்றி, தகர்வென்றி, யானைவென்றி, பூழ்வென்றி,* சிவல்வென்றி, கிளிவென்றி, பூவைவென்றி, குதிரைவென்றி, தேர்வென்றி, யாழ்வென்றி, சூதுவென்றி, ஆடல்வென்றி, பாடல்வென்றி, பிடிவென்றி"யென்று பலபட வகுத்து விரித்திருக்கின்றமை காண்க. இங்ஙனம் விரிக்குங்கால் ஆசிரியர் தொல்காப்பியனார் 'கொடுப்போ ரேத்திக் கொடார்ப் பழித்தலு'மென்று 'பாடாண்டிணை'யில் வகுத்துக் காட்டிய துறையொன்றனையும் இவர் தமது 'ஒழி'பிலெடுத்துக் கோத்துரைத்தார்.

என்றிதுகாறும் விளக்கிக் கூறியவாற்றால், ஆசிரியர் ஐயனாரிதனார் தமது புறப்பொருள் வெண்பா மாலையின் பொதுவியற் படலத்திற் 'சிறப்பிற் பொதுவியற்பால' காஞ்சிப் பொதுவியற் பால'வென்றும், 'முல்லைப் பொதுவியற்பால' வென்றும் வகுத்துக் காட்டிய துறைக்கருத்துகள் உண்மையிற் புறப்பொருளொழுக்கங் கட்குப் பொதுமையுடையன வல்லவாய் ஆசிரியர் தொல்காப்பியனார் வகுத்துக் காட்டிய 'காஞ்சிப்பொரு'ளொழுக்கங்களிலும் 'வாகைப்பொரு' ளொழுக்கங்களிலும் முறையே அமையுமென்பதும், அங்ஙனமே வெண்பா மாலையில் ஒழிபென்று காட்டிய புறனடைக்கருத்துகள்தொல்காப்பியத்துட் கூறியவாகைத்திணைக்கண் 'அனை நிலைவகை' யெனப்படும் பிரிவில் அடங்கு மென்பதும், மற்று வெண்பாமாலை யாசிரியர் தமது பொதுவியற் படலத்தின் முதற்கண் 'பொதுவியற் பால' வென் றுரைத்த சில செய்திகண் மட்டுமே புறப்பொருளொழுக்கங்கட்குப் பொதுவா யியல்வனவாமென்பதும், அச் சிலவற்றையும் ஆசிரியர் தொல்காப்பியனார் ஐயனாரிதனாரைப்போற் 'பொதுவிய'லென ஒன்று பகுத்துக் கூறாது, வெட்சித்திணையின் புறனடை நூற்பாவிலேயே தொகுத்துக் கூறினாரென்பதும் இனிது விளங்காநிற்குமென்க.

---

* பூழ்-காடை.

சேதேன் சிறுவன்

[சேவவேள்]

1 சேதேன் சிறுவனுடன் சென்று தினகரனற்
போதும் மலையின்கீழ்ப் போகின்ற—போதின்கண்
2 வைப்பாற் றகன்பரப்பின் வந்திருந்தே னம்பரம்பார்த்
தப்பா வதென்னென்றா னங்கு. 1

வானையும் நோக்கினான் மற்றங்கே வானமீனின்
தானையும் சுட்டிமழை தான்பெய்ய வைத்தசிறு
நேர்வழியோ கால்வழங்கு காலதரோ [3] நீயெனக்
கோர்வையேற் சொல்லென்றா னொன்று. 2

சேதாமென் செல்வச் சிறுவன் தனக்குநான்
யாதானும் சொல்ல வறிவனோ—போதேய்
குறுங்கையால் விண்மீன் குறித்துப் பெயல்தான்
உறும்வழியோ சாற்றென்றான் ஓர்ந்து. 3

மேல்கடற்கண் ஞாயிறும் மேவ வெருவினான்
பால்கிடக்கும் வாயால் பகல்விளக்கு [4] வீழ்வதென்
வெள்ளி பதறி விழிப்பதென் என்றுரைத்தான்
தெள்ளி யுரைப்பனோ தேர்ந்து. 4

திங்களும் ஞாயிறும் சேராப் பகைவரோ
அங்கண் விசும்பில் அவர்சேர்ந்து வாராரோ
அங்கே திரிகின்ற அம்புலியை இங்கெனது
செங்கரத்திற் சேரென்றான் சேய். 5

தெண்ணிலவிற் சேர்கருப் பேதென்றான் யார்வைத்தார்
எண்ணியவை ஈங்குரைப்பாய் என்றானே—உண்ணாந்தே
எண்ணறுநின் கேள்விக் கெதிருரைப்பா ரில்லென்றேன்
கண்ணிரண்டி னீருகுத்தான் காண். 6

---

1. சேது-சிறுவன் பெயர்.
2. வைப்பாறு-ஓர் ஆற்றின் பெயர்.
3. காலதர்-பலகணி.
4. ஞாயிறு.

நோவா திருவென்ன நொந்தானை யேவிழித்
தாவா விதென்னென்றே னம்புலியைப் பாரென்றேன்
கூன்மதியை நோக்கிக் குளிர்மகிழ்வு மெய்தியே
ஏன்வளைந் ததென்றா னிது. 7

கற்றார்கள் எல்லாம் கலித்தொகையே பாட்டென்பார்
மற்றாரும் மாட்டாத வாசகமே பாட்டென்பார்
சற்றேயும் ஒப்புவனோ சார்குதலைச் சொற்கேட்கப்
பெற்றேனாற் சேதேநீ பேசு. 8

"தேவ கோட்டை"

ஸ்ரீ சுவர்ணமூர்த்தி பெண் பாடசாலை

திருவாரூர், செந்தமிழ்ப்பானுப் பத்திராதிபர், தமிழ்ப் பண்டிதர் திருவாளர். வை. செல்லய்யாச் செட்டியாரவர்கள், மாணவிகளைப் பரீட்சித்துத் தந்த

"எழுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்."

1. இன்னிசை யுடனேற் றம்பெறுந் தேவை
    யிலங்கழ கப்பவே ளியற்றுந்
தன்னிக ரில்லாச் சுவர்ணமூர்த் திப்பெண்
    பாடசா லையுறுமா ணவிகள்
கன்னலோ தேனோ கனிரச மோநற்
    கண்டினின் சுவையதோ வென்ன
நன்னய மாகப் பாடுமின் னிசையே
    நமதுள மகிழ்வையீந் ததுவால்.

2. சுந்தரச் சுவர்ண மூர்த்திபெண் பாட
    சாலையிற் றுலங்குமா ணவிகள்
செந்தமிழ் மணியாந் திருக்குற ளுடனே
    திகழுநா லடிமுத லாகி

வந்த நந்நீதி நூல்களுங் கற்பின்
மங்கையர் சரிதமுங் கற்றே
சொந்தமாப் நூல்நூற் குந்திற னுடனுந்
துலங்குதல் கண்டக மகிழ்ந்தேன்.

3. செப்பரும் பெருமைத் தேவைநங் நகரிற்
சிறப்புறுந் தனவணி கேசன்
துப்புடை யழகப் பேந்திரன் சுவர்ண
மூர்த்திபெண் பாடசா லையுமாங்
கொப்பிலா சிரிய னுமுயர் முருகன்
ஓங்குமா ணவிகளு முயர்ந்தே
இப்புவி தனில்நீ டூழிவா ழியவென்
றிறையரு முகனைவாழ்த் துதுமே.

கொடுக்கூர் கோவிந்தன்

[திரு. காழி. சிவ. கண்ணுசாமி யவர்கள் B. A.]

(௫௧௨-ம் பக்கத் தொடர்ச்சி)

அவள்மட்டுந் தனியாக இருக்கக் கண்டதும், சம்புலிங்கம் திரைக்குப் பின்புறந்தான் ஒளித்திருக்கவேண்டும் என முதலியார் யூகித்துக்கொண்டு துணிந்து மேடைமீதேறி அத்திரையை நீக்குமாறு அதன்மீது கையை வைத்தார்.

அவ்வளவுதான். கையை வைத்த அதே விநாடியில் ஒரு பலமான கை தோளின்மீது வைக்கப்பட்டு இருப்புக்குறட்டைப் போல் அழுத்திப் பிடிப்பதாக முதலியார் உணர்ந்தார்.

"என் அழகு துரையே! வேண்டாம் அதைத் தொடாதீர்கள். நான்தான் இதோ உங்களுக்காகக் காத்துக்கொண்டு உட்கார்ந்திருக்கின்றேனே. என் பக்கலில் வந்து அமருங்கள்.

தங்களை யொத்த பெரியோர் இவ்விடத்தில் எழுந்தருளுவது எப்பொழுதோ அத்தி பூப்பது போலன்றோ? வாருங்கள் வந்து உட்காருங்கள்'' என்று கீச்சுக்குரலில் கூறியவண்ணம் தாடிக்காரி முதலியாரை இழுத்துத் தன்னருகே உட்கார வைத்துக்கொண்டாள். கலகலத்தவராய், முதலியார் தாடிக்காரியை உற்றுநோக்கினார். அவள் பெண்ணைப்போல் தோன்றவில்லை. பெண்ணுடை யணிந்த ஏதோ ஒரு பேயென்றே நம்பினார். இருந்தாலும் அச்சத்தை வெளிக்காட்டாமல், "திரைக்கப்புறம் இருப்பது யார்?'' என்று கொஞ்சலாக மொழிந்து தன் பணப்பையை எடுக்கக் கையை நீட்டினார். முதலியார் கருத்தென்னவென்றால், சம்புலிங்கம் உள்ளே ஒளிந்திருந்தால் ஏதாவது இரண்டொன்று பெற்றுக்கொண்டு தாடிக்காரி அவனைக் காட்டிக் கொடுத்துவிடுவாள் என்பதே.

"அங்கே யாரிருக்கிறார்கள், ஒருவருமில்லையே கூச்சமின்றி என்னை அணைத்து முத்தமிடுங்கள். உங்கள் கனிவாயின் முத்தத்திற்காக இத்துரையம்மாள் எவ்வளவு காலம் தவங்கிடந்தாள் தெரியுமா?'' என்றாள் தாடிக்காரி துரையம்மாள்.

இவ்வாறு சொல்லும்பொழுதே அவளுடைய கைகள் முதலியாரின் கழுத்தைச்சுற்றிக் கட்டிக்கொண்டன. ஆ! அவைகள் கைகள்தானா? அதிலும் ஒரு பெண்பிள்ளையின் கைகளா! ஒவ்வொன்று ஒரு சிறு இருப்புலக்கை போலல்லவோ தோன்றிற்று! கைகளை விலக்க முயன்றார். இப்படியும் அப்படியும் கழுத்தை அசைத்தார். இருந்த இடத்திலேயே உடலை அரைத்துக் கொடுத்துக்கொண்டார். ஒருபாவமு மறியாதிருந்தபொழுதே தான் தாடிக்காரியை முத்தமிட்டதாக ஒரு புரளி கட்டிவிட்டுத் தன் மானத்தைக் குலைத்திருக்கிறார்கள். இப்பொழுது அது புரளி நிலையிலிருந்து உண்மையாக மாறிவிடுவதென்றால் எவ்வாறு பொறுக்கமுடியும்? ஒற்றைக்காசுடன் உயிரைவிடும் நம்முதலியார் ரூபாய் ஆயிரம் ஒருமிக்க வருவதாக இருந்தாலும் தாடிக்காரியை மட்டும் அணைத்து முத்தமிடத் துணிய முடியாதவராக இருந்தார். ஆகவே, "உம்ஊம், சும்மா

யிரு, அதெல்லாம் வேண்டாம். இதோ, அந்தத் திருட்டுப் பயல் சம்புலிங்கம் இங்கே வருவதாகச் சொன்னனே! அவன் எங்கிருக்கிறுன் தெரியுமா?'' என வினவினர்.

வினவிய அதே நொடியில் அவரது கழுத்தைச் சுற்றியிருந்த கைகள் விலகின; தாடிக்காரியின் புடவை அவிழ்ந்து வீழ்ந்தது; அத்துடன் ஒரு பொய்த் தாடியும் முன்மயிரும் வீழ்ந்தன. "முதலியார்வாள்! இதோ இருக்கின்றேன், தங்கள் ஊழியன் சம்புலிங்கம். வாக்குத் தவறினன் சம்புலிங்கம் என்பது இது வரையில் தங்கள் கருணையிற் கிடையவே கிடையாது. இன்ன நாள் இன்ன இடத்தில் பார்ப்பேன் என்றுசொன்னல் பார்த்தே தீர்வேன்'' என்று தாடிக்காரி யுடையணிந்திருந்த சம்புலிங்கம் மொழிந்தான். இதை யொரு சிறிதும் எதிர்பாராத முதலி யார் அப்படியே கல்லாக மாறிவிட்டார். இருந்தாலும் விரை வில் நல்லுணர்வு வரப் பெற்றவராய் ஊதுகுழலை யெடுத்து வாயில்வைத்து ஊதினர். அது எதற்காக என்பதை யுணர்ந்த சம்புலிங்கம் ஊதுமுன் அதை ஒரே அடியில் தட்டிவிட்டிருக் கலாமானலும் வேண்டுமென்றே அவரை ஊதவிட்டு வாளா விருந்தான். இது அவன் முன்னரே எதிர்பார்த்ததுதான்.

"வீச்'' என்று ஒரு ஓசை கிளம்பிற்று. சம்புலிங்கம் அதே நொடியில் திரையைத் தள்ளிவிட்டுப் பின்புறம் பாய்ந்தான். முதலியார் எட்டிப்பிடிக்கத் தாவினர். போலீஸ் வீரர்களும் கோவிந்தசாமி நாயுடுவும் திடுதிடென்று மேடைமீதேறி வந்த னர். கட், கட், கிட்,

மேடைமீது போடப்பட்டிருந்த கூடாரத்தின் கயிறுகளில் இரண்டைத் தவிர மற்றவற்றை யெல்லாம் முன்பே அறுத்து விட்டிருந்த காசி—அதற்காகத்தான் அவன் கொட்டகையின் பின்புறம் சென்றது—சம்புலிங்கம் வெளியிற் பாய்ந்த அதே விநாடியில் எஞ்சியிருந்த இரண்டு கயிறுகளையும் வெட்டிவிட் டான். கூடாரத்தின் நடுவிலிருந்த கம்பம் ஒரு அசைவு அசைந்து சாய்ந்தது. கூடாரம் முழுதும் அப்படியே முதலி

யார் தலையிலும், போலீஸ் வீரர்கள் தலைகளிலும் வீழ்ந்தது. வலையிலகப்பட்ட மீன்கள்போல் கூடாரத்தினடியில் அவர்கள் துடித்துக்கொண்டிருந்தனர்.

"காசி, இனி நீ இங்கு நில்லாதே ஓடிவிடு!' என்றான் சம்புலிங்கம். "தாங்கள்?" என்றான் காசி.

"நானும் இதோ உன் பின்னேயே வருவேன். இருவரும் சேர்ந்து போகக்கூடாது," எனச் சம்புலிங்கம் கூறியதும் மறுமொழி கூறாமல் காசி மறைந்தான். அளவுகடந்த மகிழ்ச்சியுடன் கூடாரக் கோலத்தைப் பார்த்தவண்ணம் பின்புறம் நகர்ந்து நகர்ந்து பீதாம்பர யோகியாரின் கொட்டகைத் திட்டி வாயிலருகே வந்து நின்று அதன்மீது சாய்ந்துகொண்டான் சம்புலிங்கம். அவனது தலை திட்டி வாயிலில் விடப்பட்டிருந்த கருப்புத்திரையின்மீது உராய்ந்தது.

இவையனைத்தையும் ஒன்றுவிடாமற் பார்த்துக்கொண்டிருந்த கோவிந்தன் தான் கோரியிருந்த சமயம் வாய்த்தது கண்டு சட்டெனத் திரும்பிக் கருங்காலிப் பீடத்தின் மீதிருந்த எஃகுக் குண்டையெடுத்துவந்து அதைக்கொண்டு ஓங்கினவண்ணம் சம்புலிங்கத்தின் தலையின்மீது தாக்கினான். அறிவிழந்து மூர்ச்சையுற்றுக் கீழே விழுந்தான் சம்புலிங்கம்!

நான்காங் கூறு

சம்புலிங்கம் பிடிபடல்

அறுந்து விழுந்துகிடந்த கூடாரத்தின் அடியிலிருந்து மெதுவாக ஒரு தலை வெளியே வந்தது; அது போலீஸ்புலி கோவிந்தசாமி நாயுடுகாரு அவர்களுடையதாகும். அந்தோ! நாயுடுகாரு வாயில் வந்தபடியெல்லாம் யாரையோ தூற்றிக் கொண்டிருந்தார்.

தூற்றிக் கொண்டிருந்தவர் முகத்தில் சட்டென மகிழ்ச்சிக் களை தோன்றிற்று. ஏன்? தனக்கெதிரே நாலைந்து அடிகட்கப்

பால் சம்புலிங்கம் செயலற்றுக் கீழேவீழ்ந்து கிடப்பதைக் கண்டுவிட்டார்.

கண்டதுதான்: தன்வலிமை முழுதுங் கொண்டு முயன்று கைகளைக் கூடாரத்திற்கு வெளியிற் கொண்டுவந்தவராய் முன் நகர்ந்து பூனை எலியின்மேற் பாய்வதுபோல் பாய்ந்து சம்பு லிங்கத்தின் காலகளை இறுகப் பற்றிக்கொண்டு திரும்பிப் பார்த் தார்.

கூடாரத்தின் கீழகப்பட்டிருந்த மற்றவர்களில் ஒருவரும் வெளியில் வந்ததாகத் தெரியவில்லை. ஒருவரோடொருவர் உள்ளேயே உருண்டு புரண்டுகொண்டிருந்ததாகத் தெரிந்தது. "சோம்பேறிகளே! விரைவில் வெளியே வாருங்கள், சம்புலிங் கத்தைப் பிடித்துவிட்டேன். நேரந் தாழ்த்தினால் கைக்கெட் டினது ஒருவேளை வாய்க்கெட்டாமற் போய்விடும். ஓடி வாருங்கள்" என்று உரத்த குரலிற் கூவினார்.

கூடாரத்துணி கடல் அலைபோல் அசைவுற்றது ; ஒரு தலை வெளியில் வந்தது; அதன்பின் மற்றொன்று. போலீஸ் உடை யணியாத இரண்டு வீரர்களும் வெளியே தலைகளை நீட்டினர்.

கோவிந்தசாமி நாயுடுவிற்கு எப்படி சம்புலிங்கம் அகப் பட்டுக்கொண்டான் என்பதைப்பற்றி ஆலோசிக்க நேரமில்லை. யார் வைத்த கொள்ளியோ வீடு வெந்தது சரி என்பதுபோல் எப்படியோ அவன் உணர்வற்று விழுந்துகிடந்தான் ; அது தான் கோரியது. முதலில் அவனிடமிருந்த கைத்துப்பாக் கியை உடனே எடுத்து வைத்துக்கொண்டார். தன்னுடைய ஆட்கள் விரைவில் வெளிவரவில்லையென்று கண்டதும் "கயிறு, கயிறு, யாராவது ஒரு கயிறு கொண்டுவாருங்கள்" எனக் கூவினார். அவ்வாறு அவர் கூச்சலிட்டபின்தான் பீதாம்பர யோகியார் தன் கொட்டகையைவிட்டு வெளியே வந்தார். ஆனால் இதுவரையில் நிகழ்ந்த ஒவ்வொன்றையும் அவரும் அவரது வேலையாளான கருப்பையனும் விடாமற் பார்த்துக் கொண்டே இருந்தார்களென்று கூறவேண்டியதில்லை.

வெளியில்வந்த யோகியார் "கயிறு, கயிறு" என்று நாயுடு காரு கத்திக்கொண் டிருப்பதைக் கண்டு உட்சென்று ஒரு நீண்ட மணிக் கயிறொன்றைக் கொண்டுவந்து கொடுத்தார். சம்புலிங்கத்தின் கைகால்கள் இறுகக் கட்டப்பட்டன.

இங்கிலேயில் மிகவும் வருத்தத்துடன் முயன்று திவான் பகதூர் முதலியார் கூடாரத்தினடியிலிருந்து வெளியே வந்து சேர்ந்தார். சலவைக்கல்லே யொத்திருந்த அவரது தலையில் கூடாரத்தின்கால் விழுந்ததனுலாகிய ஒரு புண் இருந்தது. தலையைத் தடவிக்கொண்டே விளக்கெண்ணெ யுண்டவன்போல் முகத்தை வைத்துக்கொண்டு வெளியில்வந்த முதலியாருக்குச் சம்புலிங்கம் பிடிபட்டுக் கிடந்ததைப் பார்த்ததும் மட்டற்ற மகிழ்ச்சி யுண்டாயிற்று.

"ஆகா, பிடித்துவிட்டீர்களா பயலே; அதுதான் சரி, அதுதான் சரி; நான் அப்பொழுதே கூறவில்லையா என் சூழ்ச்சி பலித்துவிடுமென்று?" என கோவிந்தசாமி நாயுடுகாரைப் பார்த்துக் கூறினர்.

"உம்—உமது சூழ்ச்சி பலித்ததும் பலிக்காததும் ஒருபுறமிருக்கட்டும். யார்பண்ணின புண்ணியமோ அகப்பட்டுக்கொண்டான். அவனைச் சிறையில்கொண்டு சேர்க்கவேண்டுமே அதற்கென்ன செய்வது? அவன் கூட்டாளிகளுக்கு மட்டும் தெரிந்துவிட்டால் எளிதில் இவ்விடத்தைவிட்டு நகரவிட மாட்டார்கள். இதற்கு என்ன செய்வதென்று தெரியவில்லை" என்று மறுமொழி கூறினர் நாயுடுகாரு.

முதலியாருக்கு இது பிடிக்கவில்லை. ஏதோ நம்மாலியன்றதைச் செய்துவிட்டோம் ஒப்புக்கொண்டால் ஒப்புக்கொள்ளட்டும், இல்லாவிட்டாற் போகட்டும் என்று ஒரு எண்ணம் உண்டாயிற்று. மேலும், முன்ஒருகால் நகராண்மைக் கழகத் தலைவராயிருந்தவரும் இப்பொழுது அக் கழக உறுப்பினர்களில் ஒருவரா யிருப்பவருமாகிய ஒரு பெரியமனிதர் போலீஸ் வீரர்கள் ஒரு வழிப்பறிக்காரனைச் சிறைப்பிடிக்கும் இடத்திற்

காணப்படுவது ஏற்றதாகப் பிறரால் மதிக்கப்படாது என்ற ஒரு எண்ணமும் எழுந்தது. ஆகவே,

"கருத்தாக அவனைக் கொண்டுபோய்ச் சிறையிலிடுங்கள்" என்று கூறியவண்ணம் அவ்விடத்தைவிட்டு விரைந்து சென்று விட்டார்.

கோவிந்தசாமிநாயுடு தனக்கு உண்டான வெறுப்பை ஒருவாறு அடக்கிக்கொண்டவராய் "அடே, அவனைத் தூக்கிக் கொண்டு மேற்புறவாயில் வழியாகச் செல்லுங்கள். அது சற்று சுற்றேயாயினும் அதுவே இவ்விடத்தைவிட்டு எளிதில் வெளிச் செல்லக்கூடிய வழியாகும்" எனக் கட்டளையிட்டார்.

இதற்குள் இன்னும் இரண்டு மூன்று போலீஸ் வீரர்களும் அங்குவந்து சேர்ந்தனர். அவர்களையுந் துணைக்கழைத்துக் கொண்டு சம்புலிங்கத்தைத் தூக்கிக்கொண்டு நாயுடுகாரும் மற்றையோரும் மேற்புறவாயிலை நோக்கிப் புறப்பட்டார்கள். சம்புலிங்கத்தின் தோழர்களில் எவனுவது எங்காவது தென்படுகின்ருனு என்று நாயுடுகாரு கூர்ந்து நோக்கியவராய்ச் சென்று கொண்டிருந்தார். யோகியார் ஒரு கனைப்புக் கனைத்துக் கொண்டு உவகைப் பெருமூச்சுவிட்டு "போ, பயலே, சிறை வாழ்வு எப்படி யிருக்கிறதென்று பார்; நானுவது சிறையை விட்டு விரைவில் வெளிவந்துவிட்டேன்; அவன் எங்கே அப்படி வருவது!" என்று கூறிக்கொண்டே தன்னுடைய கொட்டகைக்குட் சென்ருர்.

* * *

"சரி காசி, இனி இங்கு நில்லாதே ஓடிவிடு" என்று தன் தலைவன் கட்டளையிட்டதைக் கேட்ட காசி உடனே அப்புறம் சென்று விட்டானுனாலும் அவனுக்கு நந்தவனத்தைவிட்டு வெளியேசெல்லக் காலெழவில்லை. சம்புலிங்கத்திற்கு ஏதோ தீங்கு நேரிடப்போகிறது என்று அவனையறியாமல் ஒரு உணர்ச்சி உள்ளத்தில் எழுந்துகொண்டேயிருந்தது. ஆகையால் வெளியே செல்லவும் முடியாமல் மயங்கி மயங்கி இங்கு

மங்குமாக உலவிக்கொண்டிருந்தான். உலவிக்கொண்டே மேற்புறவாயிலண்டை வந்தபொழுது ஒரு கும்பல் உரக்கக் கூச்சலிட்டுக்கொண்டு ஒருவர்மேல் ஒருவர் விழுந்து தள்ளி எதையோ சூழ்ந்து சென்றுகொண்டிருக்கக் கண்டான்.

"என்ன செய்தி, ஏனிந்தப் பரபரப்பு?" என்று அக்கூட்டத்திலிருந்த ஒருவனைக் கேட்டான் காசி.

"யாரோ ஒரு வழிப்பறிக்காரனைப் போலீஸ்காரர்கள் சிறைப்பிடித்துப் போகிறார்களாம்" என்ற மறுமொழி வந்தது.

"ஆம், ஆம், அதனாலென்ன? வழிப்பறிக்காரனென்றால் சம்புலிங்கமா யிருக்கவேண்டுமா என்ன? இருந்தாலும் அவனுக்கு ஏதாவது தீங்கு நேர்ந்துவிட்டதோ என்னவோ என்று நெஞ்சு நடுக்குறுகிறது. ஏழை பங்காளன், எளியவர் நண்பன் என்றால் அவனுக்கே தகும். அவனைப் பிடித்துவிட்டால் பிறகு என்ன இருக்கிறது?" என்று கூட்டத்திலிருந்த மற்றொருவன் தொடர்ந்து கூறினான்.

காசி விலவிலத்துத் தளர்ந்துவிட்டான். எங்குத் தான் அஞ்சியது உண்மையில் நேர்ந்துவிட்டதோ என நடு நடுங்கினான். இந்நிலையில் எதிரே தம்மண்ணனும் பட்டக்காரனும் வரவே அவர்களை விளித்துத் தான் கேட்டதைத் தெரிவித்து அவர்களையும் அழைத்துக்கொண்டு விரைவாய்க் கூட்டத்தினுட் புகுந்தான். சிறிதுநேரத்தில் பரட்டையும் முனியனும் எங்கிருந்தோ விழுந்தோடிவந்து அவர்களைப் பின்தொடர்ந்து புகுந்தனர்.

"அடே இவன் யார்ரா இவன், ஏண்டா இப்படித் தள்றிங்கோ?"

"ஏ, எருமீசை, யாருண்ணு நெனச்சிக்கினே, தவிடு தெள்ளிடுவேன் தெரியுமா?"

"ஏண்டா! ஒனக்கு மூளையில்லே அங்கபோய் என்னாத்தே சாதிச்சூடப்போறே? பிடிச்சிக்கிட்டுப்போர சம்புலிங்கத்தே

இட்டாந்துடப் போரியோ?" என்று புகுந்து ஓடுமிவர்கள் தள்ளிக்கொண்டு முன்னேறியதால் உண்டான கூக்குரலில் கடைசியாக ஒருவன் கூறியதைக் கேட்டதும் கூட்டாளிகள் அயர்ந்து சற்று நின்றுவிட்டனர். ஆ! மடையன் நான், இரண்டு விநாடிமுன் இங்கே வந்திருந்தேனானால் இந்தப் பயல்கள் இவ்வாறு பலாப்பழத்தில் ஈ மொய்ப்பதுபோல் மொய்த்துக்கொள்வதற்குள் அவரை இமைகொட்டு நேரத்திற் கொண்டுபோயிருக்கமாட்டேனா? இருந்தாலும் இப்பொழுது என்ன செய்வது? என்று வருந்தினான். காசி பட்டக்காரனும் தம்மண்ணனும் பெருமூச்சு விட்டுக்கொண்டு ஒன்றும் புரியாமல் திகைத்து நின்றனர். உண்மை இன்னதென்று ஒருவாறு பரட்டைக்குப் புலப்பட்டதும் இன்னதுதான் செய்தான் என்று அவனுக்கே தெரியாது. முன்னிருந்தவர்களையெல்லாம் அங்கும் இங்குமாக வாரியெறிந்துகொண்டு வாயில் வந்தபடி ஏதேதோ உளறிக்கொண்டு முன்னேறினான், உறுமினான், கதறினான், கண்களில் நெருப்புப் பொறி பறக்க இங்கும் அங்கும் விழித்தான்.

(தொடரும்)

புகழேந்தி - செந்தமிழ் நாடகம்

(இதன் உரிமை யாக்கியோற் குரியது)

[திரு அ. நடராஜ பிள்ளையவர்கள்]

[௨௭௩-ம் பக்கத் தொடர்ச்சி]

இரண்டாமங்கம் - ஐந்தாங் காட்சி

இடம்:—சோணாட்டுச் சிறைக் கூடத்தின் மற்றொருசார்

காலம்:—பிற்பகல்: நட.ர்-புகழேந்தி, ஆறுமுக வேளான், கருப்பணசாரி, கண்ணன், வெள்ளையணசாரி, நல்லான், பெருமாள் பிள்ளை, அங்கணசாரி.

(ஆறுமுக வேளான் முதலிய வெழுவரும் அடக்கமா யொருபுற மமர்ந்திருக்க, அவர்கட்கு முன் புகழேந்தி யொரு முக்காலியில் வீற்றிருக்க.)

(நேரிசை யாசிரியப்பா)

புகழேந்தி:—மாணவ மணிகாள்! சென்றநன் மதியில்
காணவே விளக்கிய கவின்மொழி வகையாம்
இயற்சொ றிரிசொ லியல்பாம் வடசொல்
திசைச்சொற் பகுமொழி பகாமொழி திறலார்
பெயர்ச்சொல் வினைச்சொற் பிறங்கு மிடைச் [சொல்]
உரிச்சொ லிடுகுறி காரண முயர்வாம்
குறிப்புட னுக்க மியல்புகு ழூஉக்குறி
இலக்கண முடைய திலக்கணப் போலி
மரூஉவோ டிடக்க ரடக்கன் மங்கலம்
தொகைதொடர் புணர்ச்சி முதலாந் தொல் [லியல்
அகம்புற மாகு மப்பொருண் முறையும்
விரித்துமே யுரைத்தனன்; விளங்கிட,
தரித்தனி ரன்றோ? தண்ணொளி மிகவே.

ஆறுமுக வேளான்:—தரித்தது மட்டுமோ? செரித்துங் கொண் [டோம்.
அமிழ்தினை நிகர்த்தநந் தமிழ்மொழி யதனில்
சொற்களோவ் வொன்றின் றூய்மையுந் தோற்ற [மும்]
கற்கண் டினையுறழ் காட்சியுஞ் சுவையும்
புறக்கா ழுடையன புல்லென மொழிந்து
புல்லறி வெனுந்தொடர் புலனுற வைத்தலும்
கல்வி யெனுமொழி கருதிய பொருளைக்
கண்டிடு முறையை விண்டிட நடத்திச்
செலுத்திடு சீர்மையுந் தெளிந்தனம்;
உலுத்தர்கட் ககப்படா வொருபெரு மணியே!

பெருமாள் பிள்ளை:—உறுதிப் பொருளா மொருபெரு நான்கினை
அறுதியிட் டுரைத்த வகைப்பொருள் புறப்பொ [ருட்]
போக்கினை யுணர்ந்தே பொன்றுதல்
நீக்கினம்; நேர்மையி னெடுமா லனையீர்!

அங்கணனாசாரி:—அன்பே சிவமென வறிந்தநம் பெரியார்
அன்பினை முறையே யழகாய் நிலையாய்
இன்பினோ டெய்த வியற்றிய வகைப்பொருட்
டுறைகளைச் சிறியேன் றுன்றிய வேழு
பிறப்பினு மறவேன் பேதுறும்
இறப்பினு மறவா தென்னுடை நெஞ்சே.

கண்ணன்:—கந்தழி நிலையுங் கவினுமப் பெயர்தான்
வந்திடு முறையு மனக்கண்
தந்தென் பெயரைத் தகுதியாக் கினவே.

புகழேந்தி:—தமிழ்த்தா யினையே சார்ந்தவர் கண்ணினை
மட்டுமோ பெறுவர்? மற்றெலாப் பொறிபுலன்
கட்டுரை யார்குங் கவின்பெறு முடலுடன்
பெற்றிடல் தகவே. பேரறி வுடையீர்!
சற்றினி நோக்குதிர் சார்ந்திடு பாவியன்
முற்று மொழிகுவன் மொழிந்தன வெல்லாம்
உயிராம். பாவிய லுடலாம் உடலின்
கூட்டங் கிடையா வாவி கூரறி
வோட்ட மின்றி யொள்ளிருட் பிழம்பில்
கிடப்பது போன்று பாவியன் முறையே
நடப்பது தெரியா நானில மாந்தர்
மடத்தனத் தாலே மயங்கியே நலிவர்.
பாவியல் தெரிந்தும் பாடுதற் கியலாப்
புலவர்க ணிலைமை விலையிலாப் பதராம்.
"காரிகை கற்றுக் கவிபா டுவதிலும்
பேரிகை கொட்டிப் பிழைப்பது நன்," றெனத்

தோன்றிய பழமொழி, வறிதே யாப்பியல்
கற்றதன் வலுவான் முற்றும் பாடுவோம்
என்றே கருதி நன்றே வருந்தி
இளைத்தவர் தமக்காம். ஆகலின், நீவிர்
சளைத்திடு முன்னம் பாவியற் கற்று,
கூறுவன் பாச்செயு முறையைக் குறிப்பாய்.
பாக்களி னுறுப்புப் பகுப்போ ராறும்.
அவற்றுண் முதல தெழுத்தாம். அவ்வெழுத்
துயிர்பனி ரண்டாம். மெய்பதி னெட்டாம்.
உயிருட் குறுகிய வோசை கொண்டன
குறிலா மைந்தும் நெடிய வோசை
கொண்டவோ ரேழும் நெடிலாம். இவைமெய்
பதினெட் டினிலுந் தனிந்தனி பரவத்
தோன்று முயிர்மெய் தொகுமுயி ரைந்தும்
ஏன்றிடு மெய்யாற் றெண்ணா றெண்ணம்
அவற்றொடு குறிலுயி ரைந்தினைச் சேர்க்கத்
தொண்ணூற்றைந்தாங் குறிலெனத் தொகுப்பீர்
நெடிலா மேழு மவற்று னிறைந்த
நெடிலுயிர் மெய்யொரு நூறுதலை யிட்ட
இருப்பத் தாறு மிணைந்திடத் தோன்றும்
ஒருநூற்று முப்பத் தொருமூன் றினையும்
நெடிலெனக் கொள்வீர். நின்றவி ரண்டாம்
உறுப்பினை யோதுவன்; கருத்தினி லுணர்வீர்.
அசையது, அவ்வெழுத் தொன்றும் பலவும்
இசைவதாற் றேன்றும்; குறிலும் நெடிலும்
தனித்துநின் றேனும், தமராம் மெய்யுடன்
சனித்துநின் றேனும் தயங்குத னேரசை;
'வாழி, வேன்மன்,' எனவரு தொடரிற்
பாழியந் தோளீர்! பகர்குறி நெடிலும்
தனித்துமொற் றடுத்துந் தங்கிடல் காண்மின்,
இனித்திடு நிரையசை யிணைக்குறில் குறினெடில்
வாளா வரினும், வளர்மெய் யுடனே

கேளாய்த் தொடரினுங் கிடைக்குமற் றதுவே.
'திருவிழா, மயிற்படாம்,' எனத்திகழ் மொழிக
மருவிய குறிலிணை, குறினெடில் வகையே[ளில்
தாமே நின்றும், தகைவிலா வொற்றுடன்
ஆமா றடைந்து மசைதலை நோக்குமின்;
நன்னான்கு தொகைபாய் நடக்குமிவ் வீரசை
ஒன்றும் பலவு மொருங்கி யிசைந்தே
ஒத்துமு டிந்த வோசையாஞ் சீர்பெற
நிற்பது சீராம்; நேரிசை தனித்து
நின்றிடி னுளாம். நிரையசை மலராம்.
இவ்விரு சீரும் இணையறு வெண்பா
இறுதியிற் பெரும்பா லிற்றுச் சிறுபால்
அம்போ தரங்கக் கலிட்பா வகத்தும்
வஞ்சிப் பாவினம் மருவியும் வருமே.
சொற்றவிவ் விரண்டசை தம்முளொன் றேடொன்
றுற்றிட நான்குசீர் உண்டா மவற்றை
இயற்சீ ரெனவே வியம்புவர் பெரியர்.
நேர்நேர், தேமா, நீள்வேல்; நிரைநேர்,
புளிமா, நிணவேல், புகரில் நிரைநிரை,
கருவிளம், திருத்தணி; கவினுர் நேர்நிரை
கூவிளம், வான்மயில்; எனவே கூறிய
முறையே யியற்சீர்க் காட்டினே முன்னுவீர்.
இயற்சீர் நான்கி னிறுதியி னேரசை
புணர்ப்பதால் நேர்நேர் நேர், தே மாங்காய்,
கந்தன் வேல்; நிரை நேர்நேர் புளிமாங்
காய்கடி மாவேல் நிரைநிரை நேர், கரு
விளங்காய், கடிமயின் மேல்; நேர் நிரைநேர்,
கூவிளங் காய்,வேல் மயிலான்; குறித்தவிவ்
மூவசைச் சீர்க ணான்கு முதற்கண்
கண்டிடு வெண்பாக் கவினுரிச் சீராம்.
காய்ச்சீர் வெண்சீ ரென்றுங் கழறுவர்.
கனிச்சீர் பொதுச்சீ ரெனவே கழறும்

சீர்களைப் பின்னர்ச் செப்புவல். சீருறு
தளையவை யேழாம். தக்கவை யவற்றினில்
இரண்டினை விளக்குவல். இயற்சீர் வெண்டளை
வெண்சீர் வெண்டளை யெனவவை விளங்கும்.
வெண்பா வினிலே விளக்கிமுற் கூறிய
ஓரசைச் சீரு மீரசைச் சீரும்
மூவசைச் சீரு முன்னுற வருமே.
வருங்கா லொன்றினு டொன்று மயங்கு
முறையே தளையாம் தேமா புளிமாச்
சீர்முனம் நிறையசை முதலிற் சேரும்
சீரும், கூவிளம் கருவிளச் சீர்முனம்
நேரசை முதலிற் பொருந்துஞ் சீரும்
புணரின் இயற்சீர் வெண்டளை புணரும்
வெண்சீர் முன்னர் நேரசை முதற்கொள்
சீர்வரின் வெண்சீர் வெண்டளை யாமே.
ஐந்தா முறுப்படி, அவ்வடி யைந்து
வகையதாய் முடியும். அவற்றுள் வளமார்
சிந்தடி யளவடி யிரண்டையுந் தேர்ந்திடின்,
முச்சீர் நாற்சீர் கொண்டிடு முறையே
ஆறா முறுப்பி னகலம் விரிக்கின்,
ஏழா றென்று மிணையறு தொடையே.
அடியினுஞ் சீரினு முதலெழுத் தொன்று
மோனைத் தொடையு முதலெழுத் தளவொத்
திரண்டா மெழுத்தொன் றெதுகைத் தொடையும்
தெரிமின். மற்றவை பின்னர்த் தெரிப்பல்
பாவின் வகையைப் பகரினங்கே
ஆமவை முதற்கண் அடுப்பது வெண்பா.
குறளெனும் வெண்பா, இருகுற ணேரிசை
வெண்பா, இன்னிசை, சிந்தியல், பஃறொடை
வெண்பா வெனவே விளங்குமன் னதுவே;
விளங்கிடு மவற்றுள், வெண்குறள் முதற்கண்
நாற்சீர் கொண்ட வளவடி கொண்டு

முச்சீர்ச் சிந்தடி பின்னர்ப் பெற்றே
ஓரசைச் சீரிறு லிறுதி யொடுங்கும்;
முன்னர்க் கூறிய வியற்சீர் வெண்டளை
வெண்சீர் வெண்டளை விளங்கிடல் வேண்டும்.
மோனைத் தொடையது முதற்சீர் மூன்றுஞ்
சீர்முன் னெழுத்துத் திகழ்ந்திட வொத்து
முடிவதும், அடிதொறு முன்னெழுத் தளவொத்
திரண்டா மெழுத்தொன் றெதுகையும் பெறுதல்
இரண்டடி யினையுந் தொடுத்தலாம். இவற்றை
மனனுறக் கொண்டு மற்றைநாட் காலை
தினகர னுதிக்குமுன் றுயிலது தெளிந்து
வள்ளுவ ரருளிய வள்ளுவப் பயனில்
நற்றவப் பயனும் நலமிகு தொடர்களில்
"வேண்டுதல் வேண்டாமை யிலானடி சேர்ந்தார்க்
கியாண்டு மிடும்பை யில," வென மொழியும்
தொடரினைப் பன்முறை துகளற வோதி
தடையுற நாவினி னன்குறப் பயின்று
கூறிய விதியெலாங் கொண்டிடல் கண்டு
வீறிய நாவின் விளங்கிய விசைகொடு
மாற்றியற் குறளினை வமுத்திட
ஊற்றிய னீரினை யொப்பவந் திடுமே.

நல்லான்:—கடன்மடை திறந்தெனக் கழறிய விவையெலாம்
திடமுட னறிந்தனம். செப்பிய படியே
செய்குவோம். சேண்பொழு தின்று சிறியேம்
உய்குதற் குதவிய வொருபெருந் திருவே.

புகழேந்தி:—ஆமாம், நானை யறைகுவன் மற்றவை.
ஏமமாய்க் கூறின விதயத் திருத்துமின்
வாமமாங் கலைமகள் வளரருள்
நாமனை வருங்கொள நாட்டினிற் றுனே.

(யாவரும் போக)

(காட்சி முடிகிறது)

(இரண்டாவதங்கம் முற்றும்)

தூத்துக்குடி சைவசித்தாந்த சபை

1929௵ அக்டோபர்௴ 20௳ ஞாயிற்றுக்கிழமை மாலை 7 மணிக்குத் தூத்துக்குடி சைவசித்தாந்த சபையில் நிகழ்ந்த அநுதாபக் கூட்டத்தின் தீர்மானங்கள் வருமாறு :—

நமது சைவசித்தாந்த சபையில் சுமார் இருபது ஆண்டுகளாக உறுப்பினராகவும், சில ஆண்டுகள் அமைச்சராகவும், சில ஆண்டுகள் நிறைவேற்றக் கழக உறுப்பினராகவுமிருந்து சபைக்கு வேண்டும் நன்மைகள் புரிந்து வந்த திரு. (ஸ்ரீ த) A. R. சிதம்பரம் பிள்ளையவர்கள் 17-10-29ல் தமது 39 ஆம் வயதில் இறைவன் திருவடி சேர்ந்தமை பற்றிச் சபையார் தங்கள் ஆற்றொணாத் துயரத்தை அவர்கள் குடும்பத்தாருக்குத் தெரிவித்துக்கொள்ளுகிறார்கள்.

2. ஷை பிள்ளையவர்களின் ஞாபகார்த்தமாக அவர்களது உருவப் படத்தைக் கூடிய சீக்கிரத்தில் சபையில் திறந்து வைக்க வேண்டியது.

3. ஆண்டுகள் தோறும் சமய சம்பந்தமான பரிசளிப்பு வகைக்கு மூலதனமாக ரூபா 200—ஷை பிள்ளையவர்கள் சபைக்கு உதவியிருப்பதைப்பற்றிச் சபையார் தங்கள் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறார்கள் என்று காரியதரிசி அறிவிக்கிறார்.

தூத்துக்குடியில் சைவத் திருவாளர் காலஞ்சென்ற சி. சு. வ. கிருஷ்ணபிள்ளை அவர்களும் அவர்கள் இருமனைவிமார்களாகம், பார்வதியம்மையாரும், சிவகாமியம்மையாரும் சுமார் 3 வருஷமாக இந்நகர் மேலூர் அம்பலவாணர் பெண் பாடசாலையில் 250 குழந்தைகள் 7 வது வகுப்புவரை இலவசமாய்த் தேவாரமும் சைவ நூல்களும் படித்துக் கொள்ளவேண்டி ரூபாய் 25000 (இருபத்தையாயிரம்) நன்கொடையளித்துள்ளார்கள். அப் பாடசாலைக்குக் கிருஷ்ண பிள்ளை அவர்கள் பெண் பாடசாலை என்று பெயரிடப்பட்டிருக்கிறது. மேலும் இந்நகர் ஸ்ரீ சங்கர ராமேஸ்வரர் பாகம்பிரியாளம்மை சிவாலயத்திற்கு மேற்கூறிய கிருஷ்ணபிள்ளை அவர்கள் பொருளாதரவில் இரண்டு வெள்ளி ரிஷபவாகனங்கள் பதினாயிரம் ரூபாயில் செலவிடப்பட்டுள்ளன. சுக்கில௵ ஐப்பசி௴ 1௳ அன்று காலை 10 மணிக்குப் பூரணகும்பத்துடனும் கொடி முதலிய மங்கலத்தோடும் வெள்ளிவாகனமிரண்டையும் எழச்செய்து திருவீதி வலத்துடன் சிவாலயம் எம்பெருமான் சந்நிதி சேர்ந்து அம்மையப்பரையும் தனித்தனியே வாகனங்களில் அலங்கரித்து மீண்டும் திருவீதி வலம் நடைபெற்றது. எனவே அவ்விரு பெண்மணிகளும் நலனுடன் வாழ இந் நகரவாசிகள் அனைவரும் இறைவனை இறைஞ்சுகின்றார்கள் என்று ஒரு நிருபர் அறிவிக்கிறார்.